14வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

வாய்; பல சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 14 பாலம் 22 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2004



04 ஆபிரிக்காவின் பெண் விடிவெள்ளிக்கு நோபல் பரிசு



09 இரண்டு இடியப்பம் பசியைப் போக்குமா?



14 உடல் எடை குறைய இலகுவான வழி

# யசீர் அரபாத்

## 1929 - 2004

### பயங்கரவாதியா? விடுதலை வீரனா?

பயங்கரவாதம் என்றால் என்ன? அது எப்போது யாரால் உருவானது என்ற கேள்விகளுக்கு புத்திஜீவிகளும், புத்தக பூச்சிகளும் பல பதில்களை தருவார்கள். ஆனால் சாதாரண மனிதனின் அறிவுக்கு எட்டிய வகையில் பயத்தை காட்டி காரியம் செய்ய வைப்பது என்பது மனித வரலாற்றில் வாழ்க்கையில் அடிக்கடி நடைபெறும் நிகழ்வுகளின் அடிப்படையில் இருந்தே பயங்கரவாதம் ஆரம்பிக்கப்பட்டது என்றே படுகிறது. குழந்தைகளுக்கு பூச்சாண்டி காட்டி உணவு ஊட்டுவதில் ஆரம்பித்து பண வங்கிகளில் துவக்கை காட்டி பணம் கொள்ளை அடிப்பதுவரை பயம் காரியங்களை செய்ய வைக்கின்றது.

பல நாடுகளிலும் தஞ்சம் புகுந்து வாழந்து வந்த பாலஸ்தீனர்களில், எகிப்து நாட்டில் வாழ்ந்து வந்த பாலஸ்தீன சமூகத்தினரில் ஆனால் கிறிஸ்தவ குடும்பமொன்றில் பிறந்தவர் யசீர் அரபாத். பாலஸ்தீனர்களுக்கு என்றொரு நிலம், அதுவும் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற பாலஸ்தீனர்களின் ஏகோபித்த கனவை நனவாக செய்யும் நோக்கத்துடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) ஸ்தாபிக்கப்படவும், அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் கண்காணித்தும் வந்தார். யசீர் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகும் நோக்குடன் தன்னையும் இஸ்லாமிய மதத்துடன் இணைத்துக் கொண்டவர்.

யூத மக்களின் வெறுப்பை சம்பாதிக்கும் வகையில் இஸ்ரேல் நாட்டிற்குள்ளும், பிற நாடுகளில் வாழ்ந்து வந்த யூத மக்களுக்கும் இன்னல்களை விளைவிப்பதன் மூலமே அவர்களுக்கு மரணபயத்தை கொடுத்து, மற்றைய நாடுகளின் நேரடி ஆதரவு இல்லாத இடத்தே பாலஸ்தீனத்தை அடைய ஒரே வழி பயங்கரவாத நடவடிக்கைகளே என்பதில் நம்பிக்கை வைத்து காரியங்களை சாதித்து வந்தவர். அதேவேளை பாலஸ்தீனர்களை கூண்டோடு அழித்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிய யூத, இஸ்ரேலியர்கள் உதராணத்திற்கு தற்போதைய இஸ்ரேலிய பிரதமராக இருக்கும் ஏரியல் சரோன் ஒரு காலத்தில் பாலஸ்தீனர்களைக் கொன்று பயங்கரவாதம் நடத்தி ஒரு பயங்கர வாதியாக நடந்து கொண்ட போதும், பணபலம் கொண்டு பல நாடுகளில் அதிலும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்களின் செல்வாக்கினால் யசீர் அரபாத் பயங்கர வாதியாகவும் ஏரியல் சரோன் இஸ்ரேல் நாட்டு காவலனாகவும் உலகத்தின் கண்களுக்கு காட்டப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலத்தில் கூட யசீர் அரபாத் விடுதலை இயக்கங்களுக்கு ஓர் உதராணபுருஷராக இருந்திருக்கின்றார். PLO இயக்கத்தை ஞாபகப்படுத்தக்கூடிய வகையில் தமிழ் இயக்கங்கள் பெயர் வைத்துக் கொண்டது தமிழ் மக்கள் அறிந்த விடயங்களில் ஒன்றே.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# தமிழுக்கு வயதென்னவோ -என்றும் தமிழ் தலைவனிற்கு துணிவே வயது




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தின்ங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
• Up to 700 Min Free
• Evenings & Weekends Free
• 2 Year contract
••• Offer Ends without notice •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - குறள் 561

நடைபெற்ற குற்றங்களை (9/11) நடுநிலை தவறாமல் ஆராய்ந்து அறிந்து மீண்டும் அவை நிகழாவண்ணம் அக்குற்றங்களுக்கு ஏற்ப தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும் என்ற வள்ளுவர் கூற்றை மனத்தில் வைத்தே அமெரிக்க மக்கள் தங்கள் அரசை கடந்த நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தெரிவு செய்தார்கள் போல் தெரிகிறது. கடந்த நவம்பர் 2இல் நடைபெற்ற தேர்தலில் அமெரிக்க ஜனாதிபதி (சரியாக கூறப்போனால் ஜனாதிபதியை தெரிவுசெய்யப்போகும் தெரி வாளர்கள்), மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள், மேற்சபை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஆகியோர் அமெரிக்க மக்களால் தெரிவு செய்யப்பட்டார் கள். இந்த வாக்களிப்பிற்கு 200 மில்லியனிற்கு மேற்பட்ட மக்கள் தகுதியானவர்களாக இருந்தார்கள். மேற்கூறியவர்களை தெரிவு செய்வதைவிட பல மாநிலங்களில் மக்கள் வாக்களிக்கும்போது முக்கிய விடயங்களுக்கு கருத்து கணிப்பு வாக்குகளையும் அளிக்குமாறு கேட்கப்பட்டிருந்தார்கள்.

## ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்யப் போகும் "தெரிவாளர்கள்" 538 பேரில் ஜோர்ஜ் புஷ் இன் குடியரசுக்கட்சியை சேர்ந்தவர்கள் 286 பேர்கள் 31 மாநிலங்களில் (States) தெரிவு செய்யப்பட்டார்கள். ஜோன் கெரியின் ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்கள் 252 பேர்கள் 20 மாநிலங்களில் (States & District of Columbia) தெரிவு செய்யப்பட்டார்கள். எந்தெந்த கட்சியில் இருந்து எவ்வளவு தெரி வாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் அவர் கள் தெரிவு செய்யப்பட்ட மாநிலங்களையும் அருகிலுள்ள அட்டவணையில் பார்க்கவும்.

| State | Kerry E.Vote | Bush E.Vote |
|---|---|---|
| Alabama | | 9 |
| Alaska | | 3 |
| Arizona | | 10 |
| Arkansas | | 6 |
| California | 55 | |
| Colorado | | 9 |
| Connecticut | 7 | |
| Delaware | 3 | |
| D.C. | 3 | |
| Florida | | 27 |
| Georgia | | 15 |
| Hawaii | 4 | |
| Idaho | | 4 |
| Illinois | 21 | |
| Indiana | | 11 |
| Iowa | | 7 |
| Kansas | | 6 |
| Kentucky | | 8 |
| Louisiana | | 9 |
| Maine | 4 | |
| Maryland | 10 | |
| Massachusetts | 12 | |
| Michigan | 17 | |
| Minnesota | 10 | |
| Mississippi | | 6 |
| Missouri | | 11 |
| Montana | | 3 |
| Nebraska | | 5 |
| Nevada | | 5 |
| New Hampshire | 4 | |
| New Jersey | 15 | |
| New Mexico | | 5 |
| New York | 31 | |
| North Carolina | | 15 |
| North Dakota | | 3 |
| Ohio | | 20 |
| Oklahoma | | 7 |
| Oregon | 7 | |
| Pennsylvania | 21 | |
| Rhode Island | 4 | |
| South Carolina | | 8 |
| South Dakota | | 3 |
| Tennessee | | 11 |
| Texas | | 34 |
| Utah | | 5 |
| Vermont | 3 | |
| Virginia | | 13 |
| Washington | 11 | |
| West Virginia | | 5 |
| Wisconsin | 10 | |
| Wyoming | | 3 |
| Total | 252 | 286 |

அமெரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்ய ஆகக்குறைந்தது 270 தெரிவாளர்கள் வாக்க ளிக்க வேண்டும். குடியரசுக் கட்சிக்கு 286 தெரிவாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் அடுத்த ஜனாதி பதியாக வருவார் என்பது நிச்சயம். (உத்தி யோக பூர்வமான அறிவிப்பு அடுத்த வருடம் ஜனவரி 06, 2005 இல் வெளியிடப்படும்)

பின்வரும் அட்டவணையில் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுடன் 2004 ஆண்டு நடைபெற்ற தேர்தலை ஒப்பிட்டு பார்ப்போம்.

| 2000ஆம் ஆண்டு | தெரிவாளர் கள் | மாநிலங் கள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| குடியரசுக்கட்சி (ஜோர்ஜ் புஷ்) | 271 | 30 | 50,456,169 (48%) |
| ஜனநாயகக்கட்சி (அல் கோர்) | 266 | 21 | 50,996,116 (48%) |
| 2004ஆம் ஆண்டு | | | |
| குடியரசுக்கட்சி (ஜோர்ஜ் புஷ்) | 286 | 31 | 59,459,765 (51%) |
| ஜனநாயகக்கட்சி (ஜோன் கெரி) | 252 | 20 | 55,949,407 (48%) |

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் பின்வரும் கட்சிகள் குறிப்பிடத் தக்கன. இவற்றைவிட சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிட்டார்கள்.

1. குடியரசுக்கட்சி - (Republican Party)
2. ஜனநாயகக் கட்சி - (Democratic Party)
3. பழமைவாதக் கட்சி - (Conservative Party)
4. சுதந்திரக்கட்சி - (Independence Party)
5. இயற்கைவிதிக்கட்சி - (Natural law Party)
6. பசுமைக்கட்சி - (Green Party)
7. சுதந்திரப்பேச்சுரிமைக் கட்சி- (Libertarian Prty)
8. சீர்திருத்தக்கட்சி - (Reform Party)
9. அரசியலமைப்புக்கட்சி - (Constitution Party)

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரில் புஷ்யையும் கெரியையும் விட குறிப்பிடத்தக்கவர்கள் ஒரு சிலரின் பெயர்கள் பின்வருமாறு.

றால்ப் நாடர் (Ralph Nadar) சுயேச்சை வேட்பாளர்
மைக்கல் பாட்நரிக் (Michael Badnarik) சுதந்திர பேச்சுரிமை கட்சி
மைக்கல் பெரோட்கா (Michael Peroutka) அரசியலமைப்பு கட்சி
டேவிட் கொப் (David Cobb) பசுமைக் கட்சி

இவர்களில் நாடர் மட்டுமே குறிப்பிடத்தக்களவு வாக்குகளை பெற்றார். அவருக்கு நாடுமுழுவதும் விழுந்த வாக்குகள் 400,706 (1%) இத்தேர்தலில் பலர்போட்டியிட்டாலும் எல்லா மாநிலங்களும் போட்டியிட்ட எல்லாருடைய பெயர்களையும் வாக்குச்சீட்டில் எழுதுவது இல்லை.

2000 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் யார் ஜனாதிபதி என்பதை புளோரிடா (Florida) மாநிலம் தெரிவு செய்த 27 தெரிவாளர்களின் முடிவுதான் நிர்ணயித்தது. அதேபோல் 2004ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் யார் ஜனாதிபதி என்பதை ஒகாயோ (Ohio) மாநிலம் தெரிவு செய்த 20 தெரிவாளர்களின் முடிவுதான் நிர்ணயித்தது.

இம்முறை வாக்களிப்பில் 2000 ஆம் ஆண்டு வாக்களித்த மக்களைவிட 15 மில்லியன் மக்கள் கூட வாக்களித்திருந்தார்கள். சென்றமுறையை போல் அல்லாமல் இம்முறை ஜோர்ஜ் புஷ் நாட்டுமக்களின் அதிகூடிய வாக்குகளையும் தெரிவாளர்களின் அதிகூடிய வாக்குகளையும் பெற்று ஜனாதிபதி ஆகிறார். 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிகூடிய வாக்குகளை பெற்றவர் அல் கோர் ஆவார்.

## மக்கள் பிரதிநிதிகள் சபை (House of Representatives)

நடந்து முடிந்த தேர்தலில் அமெரிக்க மக்கள் தங்களது "மக்கள் பிரதிநிதிகள் சபை" உறுப்பினர்கள் 435 பேர்களையும் தெரிவு செய்தார்கள். மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் Congresmen (congres women) என அழைக்கப்படுவார்கள். இவர்களது பதவிக்காலம் இரண்டு வருடங்கள் மட்டுமே. அதாவது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இரட்டை இலக்கத்தில் வரும் ஆண்டில் அமெரிக்க மக்கள் தங்களது மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களை தெரிவு செய்வார்கள்.

இம்முறை நடந்த தேர்தல் முடிவுகளின்படி குடியரசுக்கட்சி 231 இடங்களையும் ஜனநாயகக்கட்சி 200 இடங்களையும் பெற்றுள்ளன. ஓர் இடம் சுயேட்சை வேட்பாள ருக்கு சென்றுள்ளது. இன்னும் மூன்று இடங்களின் முடிவுகள் வரவில்லை. இம் முடிவுகள் கடந்த மக்கள் பிரதிநிதிகள் சபையில் இருந்த குடியரசுக்கட்சியின் ஆசனங் களை 4ஆல் அதிகரிக்கச் செய்துள்ளது. தற்போது மக்கள் பிரதிநிதிகள் சபையில் 231 இடங்களை பெற்று ஜோர்ஜ் புஷ் இன் குடியரசுக்கட்சியே அறுதிப் பெரும்பான்மையை வகிக்கிறது. (அறுதிப் பெரும்பான்மைக்கு 218 ஆசனங்களே தேவை)

## மேற்சபை (Senate)

நடந்து முடிந்த தேர்தலில் அமெரிக்க மக்கள் தங்களது 100 உறுப்பினர்கள் அடங்கிய மேற்சபைக்கு 34 பேர்களை தெரிவு செய்தார் கள். மேற்சபையில் 100 அங்கத்தவர்கள் உண்டு. ஒவ்வொரு மாநிலத்திற்கும் 2பேர் என்று எல்லாமாக 100பேர் 50 மாநிலங்களி லும் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டு களாகும். இவர்கள் Senators என்று அழைப்பார்கள். இம்மேற்சபை (Senate) உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளும், மூன்றில் ஒரு பகுதியினர் வீதம் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வருடம் 34 பேர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## சிவ ஞானநாயகன்

இம்முறை தெரிவு செய்யப்பட்ட 34 உறுப்பினர்களுடன் ஏற்கனவே இருக்கும் 66 உறுப்பினர்களும் சேர்ந்து பார்த்தால், குடியரசுக்கட்சிக்கு 55 உறுப்பினர்களும், ஜனநாயகக் கட்சிக்கு 44 உறுப்பினர்களும் மற்றும் ஒரு சுயேட்சை உறுப்பினரும் மேற் சபையில் தற்போது இருக்கிறார்கள். தற்போது மேற்சபையில் 55 உறுப்பினர்களை பெற்று ஜோர்ஜ் புஷ் இன் குடியரசுக் கட்சியே அறுதிப் பெரும்பான்மையை வகிக்கிறது. (அறுதிப் பெரும்பான்மைக்கு 51 ஆசனங்களே தேவை)

அமெரிக்க அரசாங்கத்தில் 435 உறுப்பினர்கள் உடைய மக்கள் பிரதிநிதிகள் சபையையும் (House of Representatives) மற்றும் 100 உறுப்பினர்கள் உடைய மேற்சபையையும் (Senate) சேர்த்து காங்கிரஸ் (Congress) என அழைப்பார்கள்.

## மாநில ஆளுநர் (Governor)

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உண்டு. இவற்றிலுள்ள 11 மாநிலங்களுக்குரிய ஆளுநர் தெரிவும் இம்முறை நவம்பரில்நடை- பெற்ற தேர்தலில் இடம்பெற்றது. இவற்றில் Washington மாநில ஆளுநர் தெரிவைவிட மற்றைய 10 மாநிலங்களுக்கான முடிவுகளும் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த 39 மாநில ஆளுநர்களுடன் புதிதாக தெரிவு செய்யப்பட்ட 10 மாநில ஆளுநர்களையும் சேர்த்து பார்த்தால் குடியரசுக் கட்சியை சேர்ந்த மாநில



ஆளுநர்கள் 28 மாநிலங்களிலும் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த மாநில ஆளுநர்கள் 21 மாநிலங்களிலும் தற்போது பதவி வகிக்கிறார்கள். Washington மாநிலத்தில் ஜனநாயகக்கட்சியை சேர்ந்த ஆளுநரே வர சாத்தியக்கூறுகள் உண்டு.

## கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு

பல மாநிலங்கள் மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாநிலத்திற்கு முக்கியமான விடயங்களில் கருத்துகணிப்பு வாக்கெடுப்பை யும் நடத்துகின்றன. இவ்வாறு நடந்த பல கருத்துக்கணிப்புகளில் 11 மாநிலகங்ளில் நடைபெற்ற ஒரே பாலை சேர்ந்தவர்கள் திருமணம் செய்வதை தடைசெய்யக்கோரும் சட்ட திருத்தத்தின் மீது நடைபெற்ற கருத்துக் கணிப்பு முக்கிய கவனத்தைப் பெற்றது.

அதாவது வாக்களிப்பு சீட்டில் "ஒரு ஆணிற்கும் ஒரு பெண்ணிற்கும் இடையே நடைபெறுவது மட்டும் தான் திருமணம். ஒரே பாலை சேர்ந்த இருவரின் திருமணமோ அல்லது அவ்வாறு வேறுமாநிலங்களில் நடைபெற்ற திருமணமோ எமது மாநில சட்டப்படி திருமணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு எமது மாநில அரசியல் அமைப்பிற்கு திருத்தம் கொண்டு வரப்படுகிறது" என்று இருந்தது. இதை ஆதரிப்பவர்கள் "ஆம்" என்றும் எதிர்ப்பவர்கள் "இல்லை" எனவும் வாக்களிக்க வேண்டும். இத்திருத்தத்தை ஆதரித்தே 11 மாநிலமக்களும் வாக்களித்திருக்கிறார்கள்.

இவ் ஒரே பாலை சேர்ந்தவர்கள் செய்யும் திருமணத்தை தடைசெய்வதற்கு ஆதரவாக வும் எதிராகவும் வாக்களின் வீதமும் மாநிலங்களும் கீழே தரப்பட்டுள்ளது.

| மாநிலம் | ஆம் | இல்லை |
|---|---|---|
| Arkansas | 75% | 25% |
| Georgia | 76% | 24% |
| Kentucky | 75% | 25% |
| Michigan | 59% | 41% |
| Mississippi | 86% | 14% |
| Montana | 67% | 33% |
| North Dakota | 73% | 27% |
| Ohio | 62% | 38% |
| Oklahoma | 76% | 24% |
| Oregon | 57% | 43% |
| Utah | 66% | 34% |

இந்த ஒரே பாலை சேர்ந்த திருமணத்தை தடை செய்யவேண்டும் என்ற ஆர்வத்திலேயே பல தீவிர மதப்பற்றுள்ளவர்கள் (Orthodox) வாக்களிக்க வந்துள்ளார்கள். அவர்கள் இந்த கருத்துக்கணிப்பிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதுடன் இப்படியான திருமணங்களை தீவிரமாக



தொடர்ச்சி 03ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca

HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# வீரப்பன் உருவாகக் காரணம் என்ன?

மறுபடியும் ஒரு கடத்தல். நாகப்பா என்னும் முன்னாள் கர்னாடக மந்திரி 2002 ல் கடத்திச் செல்லப்பட்டார். அப்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, முந்தைய கருணாநிதி ஆட்சியில் முடங்கிக் கிடந்த, 1993ல் ஜெயலலிதா அரசில் உருவாக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையை திரும்ப உயிர்ப்பித்து வீரப்பனை ஒழித்தே தீருவது என்று தீவிரம் காட்டியதன் காரணமாக, நாகப்பாவின் மனைவி சென்னை வந்து தன் கணவர் உயிருக்கு மன்றாடிய போதும், எந்த தூதுக்கும், பேரத்திற்கும், இணங்குவதாக ஜெயலலிதா இல்லை. கடைசியில் கொலையுண்ட நாகப்பாவின் உடல் தான் காட்டில் கண்டெடுக்கப்பட்டது.



இப்போது வீரப்பனும் அவனது சகாக்களும் தந்திரமாக அவர்களது பாதுகாப்பான காட்டு வாசத்திலிருந்து வெளியே வரவழைக்கப் பட்டனர். இதற்கு சாதகமாயிருந்தது, வீரப்பனுக்கு கண் சரியில்லை, சிகிச்சைக்கு வழி தேடிக் கொண்டிருக்கின்றான் என்ற செய்தி. அவனுக்கு உதவுவதாக சொல்லி மருத்துவ மனையும் ஏற்பாடு செய்து, அம்புலன்ஸ் வண்டியும் ஏற்பாடு செய்வதாகச் சொல்லி அவனுக்கு நம்பிக்கை தந்தது, முன்னரே அவனை நெருங்கி அவன் குழுவில் சேர்ந்து கொண்டு அவன் நம்பிக்கைக்குத் தம்மை பாத்திரமாக்கிக் கொண்ட அதிரடிப்படை பொலிசைச் சேர்ந்த இரு பொலிஸ் அதிகாரிகள்தான்.

பொலிஸ் பாதுகாப்பில் இருந்த ஒரு வண்டி அம்புலன்ஸ் வண்டியாக உருமாற்றி வெள்ளை வண்ணமும் அம்புலன்ஸ் சின்னங்களும் பூசப்பட்டு, வீரப்பன் காட்டை விட்டு வெளியே கொண்டுவரப்பட்டான். அதை ஓட்டி வந்தது அவன் குழுவில் இருந்த அதிரடிப்படை அதிகாரிகள். முன்னரே தேர்ந்தெடுத்திருந்த இடம் வந்ததும், அந்த வண்டி நிறுத்தப்பட்டது. அதிரடிப்படை சுற்றி வளைத்துக் கொண்டு வீரப்பன் கும்பலை சரணடையச் சொல்லியது. வீரப்பன் கும்பல் மறுத்து அதிரடிப்படையை நோக்கிச் சுட்டதும், பதிலுக்கு சுட ஆரம்பித்த அதிரடிப்படையின் தாக்குதலில் வீரப்பனும் அவன் கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இருபது வருடங்களாக எந்த பொலீஸ் படையும், இராணுவமும் அவனைப் பிடிக்கமுடியாத காரணம், அவன் பாதுகாப்பாக இருந்த, அவனைச் சுற்றியிருந்த பரந்த அடர்த்தியான காடும், சுற்றியிருந்த கிராமவாசிகள் அவனுக்கு உளவும், அரணுமாக இருந்தது. அவனை வெளியே கொண்டு வரத்தான் பத்து மாதங்களாகக் காத்திருக்க வைத்த இரகசியத்திட்டம். அது நிறைவேற வேண்டியிருந்தது 45 நிமிடங்களே என்கிறார் அதிரடிபடைத் தலைவர் விஜயகுமார். இந்த வெற்றிக்கு முழு ஒத்துழைப்பும், உத்வேகமும் தந்து தன் மீது நம்பிக்கை வைத்த தளராத மன உறுதி கொண்ட முதலமைச்சர் ஜெயலலிதா தான் என்றும் அவர் சொல்கிறார்.

இதெல்லாம் ஒரு புறம் இருக்க படிப்பறிவ-'ல்லாத பத்து வயது கோபி நத்தம் கிராமத்துப் பையன் காட்டினுள்ளேயே வளர்ந்தவன், சந்தனத் திருட்டு, யானைத் தந்தத் திருட்டு, கொலை என்று வளர்ந்தது ஒன்றும் ஆச்சரியப்பட வைக்கும் விசயமில்லை. ஆனால் அந்த பையன் வாலிபனாக காட்டினுள்ளேயே வளர்ந்தவன், இருபது வருடங்களாக கர்னாடக தமிழ் நாட்டு அதிரடிப்படைகளின், பின்னர் எல்லைக் காவல் படையின் ஒருங்கிணைந்த தீவிர வேட்டையிலும் அவன் பிடிபடாமல், இருபது வருடங்களாக சுமார் 2000 யானைகளைக் கொன்று அவற்றின் தந்தங்களை வெளியே கடத்தி விற்க முடிந்திருக்கின்றது. காட்டில் உள்ள அத்தனை சந்தன மரங்களையும் இனி வெட்ட மரங்கள் இல்லை என்னுமளவுக்கு வெட்டி அவற்றையும் வெளியே கடத்தி விற்றுப் பணம் பண்ண முடிந்திருக்கின்றது. ஏராளமான துப்பாக்கிகளும், துப்பாக்கிக் குண்டுகளின் வற்றாத சேர்க்கையையும், ஏ.கே. 47 போன்ற நவீன ரக ஆயுதங்களும் அவன-'டம் சேர்ந்ததும், வெடி குண்டுகளும், கண்ணி வெடிகளுமான ஒரு ஆயுதக் கிடங்கே அவன் கையிலிருந்ததும், டிரான்ஸிஸ்டர் ரேடியோக் களும், ஒலி நாடா பதிவுகளும், அவற்றில் தன் நிபந்தனைகளைப் பதிவு செய்து, அவற்றை இரகசியமாகச் சேர வேண்டிய இடத்திற்குச் சேர்க்க ஆட்படையும் இருந்திருக்கிறது. நக்கீரன் கோபாலனும், நெடுமாறனும் தூது வரும் போது, வெளியிலிருந்து அவர்களை, அவர்கள் அறியாது, காட்டினுள் கொண்டு சேர்க்கவும், பின் அவர்கள் பத்திரமாக திரும்ப இரகசியமாகவே வெளியே கொண்டு சேர்க்கவுமான வழிமுறைகள், இரகசிய ஆட்கள் ஏற்பாடுகள், இவை அத்தனையும் அவனால் செய்ய முடிந்திருக்கின்றது.

**இருபது வருடங்களாக எந்த பொலீஸ் படையும் இராணுவமும் அவனைப் பிடிக்கமுடியாத காரணம், அவனைச் சுற்றியிருந்த பரந்த அடர்த்தியான காடும், சுற்றியிருந்த கிராம வாசிகள் அவனுக்கு உளவும், அரணுமாக இருந்தது.**

கர்னாடக அரசின் பெரிய அரசியல் தலைவர்களை கடத்திச் சென்று, கர்னாடக, தமிழக அரசுகளை அவன் விருப்பத்திற்கு பேரம் பேசும் நிலைக்கு கொண்டுவர முடிந்திருக்கின்றது. ராஜ்குமாரை விடுவிக்க கிட்டத்தட்ட இருபது கோடி ரூபாய் பிணைத் தொகையாக அவனால் கேட்டுப் பெற முடிந்திருக்கின்றது. இரு அரசுகளும் அதற்கு அடி பணிந்திருக்கின்றனர். இத்தகைய ஒரு அசுர வளர்ச்சி ஒரு காட்டு வாசத்தில் எப்படி சாத்தியமாயிற்று அந்தப் பையனுக்கு? ஒரு கொலை, ஒரு மரம், ஒரு யானைத் தந்தம் என்று ஒரு வளர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் வீரப்பன் பரிமாணம் அதுவல்ல.

எப்படி சாத்தியமாயிற்று? அவன் எப்படி வளர முடிந்தது, தடையற்று? அரசியல் தலைமைக-ளின், காவல் துறையினரின், வனத்துறையின ரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் அதற்கு அவர்கள் பெற்ற பிரதிபலனும் இல்லாது இது சாத்தியமாகியிருக்குமா என்ன?

கர்னாடக முன்னாள் பொலீஸ் அதிகாரி, தினகரின் பயங்கர குற்றச்சாட்டை மறுத்து யாரும் அவரை நீதி மன்றத்திற்கு இழுத்துச் செல்லவில்லையே, ஏன்? வீரப்பன் கொல்லப்பட்டு விட்ட பிறகு, அவனுக்கு பின் இருந்து உதவிய, அவனது இலாபத்தில் பங்கு கொண்டவர்கள் யார்? யார்? என இனி அறிவது துர்பலம் தான்.

## வெங்கட் சாமிநாதன்

சீனாவில் இருந்து வரும் The China Daily யும், The Beijing Youth Daily என்னும் பத்திரிகையும் வீரப்பன் சுடப்பட்டு இறந்தது பற்றி மிக விரிவான பாதி பக்க அளவு செய்திகள் வெளியிட்டிருப்பதாக தெரிகிறது. இவற்றைப் படித்த சாதாரண மக்கள் கேட்கும் கேள்வி; 'நூறு பேருக்கு மேல் கொலை செய்தவனை என்றோ பிடித்திருக்க வேண்டாமா? இவனைப் பிடிக்க இந்தியாவுக்கு ஏன் இத்தனை வருடங்களாயின? கவனிக்கவும், அவர்கள் கேட்பது, 'இந்தியாவுக்கு?' என்று இக்கேள்விகளை இங்கு யாருமே கேட்கவில்லை?

1993 ல் ஜெயலலிதா சிறப்பு அதிரடிப் படையை உருவாக்கினார். அதன் தீவிர செயல்பாட்டில் கிட்டத்தட்ட நூற்றுவருக்கும் மேல் என வீரப்பன் அது காறும் திரட்டியிருந்த கும்பல், படிப்படியாக ஒழிக்கப்பட்டு, 1996 தேர்தலில் ஜெயலலிதா தோல்வியுற்று கருணாநிதி முதலமைச்சரான சமயத்தில் வீரப்பன் நான்கு அல்லது ஐந்து பேராகவே குறைந்ததாக ஜெயலலிதா சொல்கிறார். ஆனால், கருணாநிதி அதிரடிப்படையைக் கலைக்காவிட்டாலும், பெயரளவுக்கே வைத்து, அதை செயலிழக்கச் செய்து விட்டதால்தான், வீரப்பன் மறுபடியும் தன் பலத்தைப் பெருக்கி, ராஜ்குமாரை கடத்திச் சென்று, இரு அரசுகளையும் தன்னோடு பேரம் பேச வைக்கும் அளவுக்கு வளரவிடப்பட்டான் என்று ஜெயலலிதா குற்றம் சாட்டுகின்றார். 2001ல் ஜெயலலிதா திரும்பவும் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சரான பிறகு, அதிரடிப்படை திரும்ப உயிரூட்டப்படுகின்றது. கர்னாடக மந்திரி, கர்னாடக மண்ணிலிருந்து கடத்தப் பட்டு மறுபடியும் பேரம் பேசும் கட்டம் வந்த போது, அவர் இதற்கு மறுத்து விடுகின்றார்.

**அவன் எப்படி வளர முடிந்தது, தடையற்று? அரசியல் தலைமைகளின், காவல் துறையினரின், வனத்துறையினரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் அதற்கு அவர்கள் பெற்ற பிரதிபலனும் இல்லாத இது சாத்தியமாகியிருக்குமா என்ன?**

சிறப்பு அதிரடிப்படையின் தீவிர இயக்கமும், ஜெயலலிதாவின் மன உறுதியும் பிடிவாதமும், சுமார் பத்து வருட ஐம்பது கோடி ரூபாய் செலவும், பலன் எதுவும் கண்களில் படாத நிலையில் எழுந்த கேலியையும், நிபந்தனைகளையும் பொருட்படுத்தாது மனம் தளராத அதிரடிப்படையை ஊக்கப்படுத்தி வேண்டிய உதவிகளை எல்லாம் செய்ததனால் கிடைத்த வெற்றியிது என்கிறார், ஜெயலலிதா.

தன் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும், ஒரு முனைப்படுத்தப்பட்ட இலக்கும் நோக்கும் கொண்ட ஒரு தீவிர செயல்பாட்டை செயல் வேகம் கொண்ட ஒரு சிறிய படை சாதித்துக் காட்டிவிட்டது என்னவோ வாஸ்தவம் தான். இது இந்தியாவின் இன்னும் சில இடங்களில் சாத்தியமாகியுள்ளது. உதாரணங்கள், அணு சக்தி உபயோகமும், விண்வெளி ஆராய்வும்.



ஆனால் ஒரு காட்டு வாழ் பையனை, அரசுகளையே அச் சுறுத்தி பணிய வைத்த வீரப்பன் என்னும் அசுர சக்தியாக்கியது இச் சமூகமும் அதன் நிர்வாக அங்கங்களும் தானே?

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

எதிர்க்கும் ஜோர்ஜ் புஷ் இற்கும் வாக்களித்துள்ளார்கள் என்று ஊடகங்கள் கூறுகின்றன.

கனடாவின் CBC செய்திகளின்படி வழமையாக அமெரிக்க தேர்தல்களிற்கு சென்று வாக்களிக்க விரும்பாத 4 மில்லியன் தீவிர மதப்பற்றுள்ள மக்கள் முதல்முறையாக சென்று ஒரே பாலை சேர்ந்த திருமணத்தை தடைசெய்யவும், ஜோர்ஜ் புஷ் இற்கும் இத்தேர்தலில் வாக்களித்துள்ளார்கள். இதுவும் ஜோர்ஜ் புஷ் இன் தேர்தல் வெற்றிக்கு ஒரு காரணம் ஆகும்.

இதைவிட கருத்துகணிப்பு எடுக்கப்பட்ட வேறு சில விடயங்களை பார்ப்போம்.

1.அரிசோனா (Arizona) மாநிலம் தேர்தலில் வாக்களிக்க அமெரிக்க பிரஜாவுரிமையை உறுதி செய்யவும் ஆவணத்தை காட்டவேண்டும் என்று சட்டதிருத்தம் கொண்டு வந்தது. இது 56% சார்பு வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. புளோரிடா (Florida) மாநிலம் வயது குறைந்த பெண்கள் (Minor) கரு அழிப்பு செய்யமுன் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று சட்டதிருத்தம் கொண்டு வந்தது இது 65% சார்பு வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு கிட்டத்தட்ட 20 கருத்துக்கணிப்புகள் இந்த தேர்தலுடன் நடைபெற்றது. அமெரிக்க மக்கள் ஒருமுறை தேர்தலுக்கு செல்லும்போது அதை பல விடயங்களுக்கு பயன்படுத்துகிறார்கள். இது அரசின் செலவை குறைக்க உதவுகிறது.

ஜனாதிபதி, மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள், மேற்சபை உறுப்பினர்கள், ஆளுநர் மற்றும் பல்வேறு வகைப்பட்ட கருத்துக் கணிப்புகளுக்கு வாக்களிப்பதுடன் சில மாநிலங்கள் அல்லது தொகுதிகள் இத்தேர்தலை பயன்படுத்தி உள்ளூர் நீதிபதிகளையும் மற்றும் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களையுமே தெரிவு செய்கிறார்கள். ஒரு தொகுதியில் மக்கள் 32 பேர்களை தெரிவு செய்ய வேண்டியிருந்தது. ஆமாம் அவர்கள் 32 தேர்தலை ஒரேநாளில் முடித்துவிட்டார்கள். எவ்வளவு அரசபணம் விரயம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. குதிரை வண்டியில் ஒருநாள் முழுவதும் பிரயாணம் செய்து வாக்களிப்பதை மனதில் கொண்டு 1787 இல் எழுதப்பட்ட தேர்தல் விதிமுறை என்றாலும் இவ்விடயத்தில் இதுமிகவும் பிரயோசனமானதே.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# இலட்சியப்பெண் - வங்கரி மாத்தாய்



ஜனநாயகம், மனித உரிமை, சூழல் பாதுகாப்பு, பெண்கள் உரிமைகள் போராட்டங்களுக்காக சர்வதேச அங்கீகாரம் பெற்ற, ஐ.நா. சபையில் பலமுறை பேசிய, பல சர்வதேச பரிசுகளும், விருதுகளும் பெற்ற, ஆபிரிக்க பெண்மணியான வங்கரி மாத்தாய்க்கு, இறுதியில் 2004 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசும் கிடைத்திருக்கிறது. இது முதன்முதல் ஓர் ஆபிரிக்கப் பெண்ணுக்குச் சமாதானத்திற்காக கிடைத்த பரிசு என்று போற்றப்படுகிறது. அத்துடன், இது உலக அரங்கில் பொதுவாகப் பெண்களுக்கும், விசேசமாக ஆபிரிக்க பெண்களுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றும் சொல்லலாம்.

ஆபிரிக்காவின் கறுப்பினப் பெண்கள் ஆண்களின் உடைமைகள், ஆண்களை மீறியோ எதிர்த்தோ குரலைக் கூட உயர்த்த முடியாதவர்கள். அப்படி உயர்த்தியதால் அன்றைய கென்ய ஜனாதிபதியான டானியல் அரப் மொய்யின் வெறுப்பையும், கோபத்தையும் சிறையையும் அனுபவித்தவர் வங்கரி மாத்தாய். அது மட்டுமல்ல தன் கணவனால் விவாகரத்தும் செய்யப்பட்டவர். அதற்குக் கூறப்பட்ட காரணம் மட்டுமே, பெண்களை ஆபிரிக்க ஆண்கள் எப்படி நடத்தினார்கள், எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள் என்பதற்கு ஆதாரமாக: 'அதிகம் படித்தவர், மிக பலம் வாய்ந்தவர், பெரும் வெற்றி அடைந்தவர், பெரும் பிடிவாதக்காரர், அடக்குவதற்கு மிகவும் கடினமானவர்.' அவ்வடிப்படைகளில் கணவருக்கு நீதிபதி விவாகரத்து வழங்கினார். அத்தனைக்கும் கணவரும் ஒரு பாராளுமன்ற அங்கத்தவர்.

கென்யாவில் 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாந் திகதி, நியரி என்ற கிராமத்தில் பிறந்தவர் வங்கரி மாத்தாய். உயர் கல்வி கிராமப் புறப் பெண்களுக்கு கிடைப்பது மிக அரிதான காலமது. இருந்தும் அமெரிக்காவில் கன்ஸாஸ் மாகாணத்தில் உயிரியலில் பட்டத்தையும் பின்னர் பிற்ஸ்பேர்க் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் (1966) பெற்றார். திரும்பி நாட்டுக்குச் சென்று நைரோபிப் பல்கலைக் கழகத்தில் மிருக வைத்திய ஆராய்ச்சியில் முனைவர் பட்டமும் (1971) பெற்றார். அக்காலப் பல்கலைக் கழகத்தில், பெண் என்ற ஒரே காரணத்திற்காக, சக ஆண் மாணவர்களால் அவர் அடைந்த அவமானமும் ஏளனமும் கொஞ்ச நஞ்சமல்ல. அதையும் மீறி முனைவர் பட்டம் எடுத்தது மட்டுமல்லாமல், பல்கலைக் கழக திணைக்களம் ஒன்றில் முதல் பெண் பேராசிரியராகவும் உயர்ந்தார்.

ஆரம்பத்தில், ஏழைகள் வாழ்வை உயர்த்துவதற்கான அமைப்புக்களில் பங்குபற்றிய அவர், பின்னர் சூழலியல் பாதுகாப்பும் வேலைவாய்ப்பும் அளிக்கும் தேசிய அமைப்புக்களில் சேர்ந்து இயங்கினார். அவ்வியக்கம் கென்யாவின் காட்டழிப்புக்கு எதிரான பல வேலைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டது.

அதைத் தொடர்ந்து, 1977 இல் Green Belt Movement ஐ ஆரம்பித்தார். அது சூழலியல், பெண்கள் பிரச்சினைகள் தொடர்பான செயல்களில் தீவிரமாக இறங்கியது. அவ்வியக்கம் இருபது மில்லியனுக்கும் மேலான மரங்களை, தோட்ட நிலங்களிலும் பாடசாலை, தேவாலய வளவுகளிலும் நட்டு மண்ணரிப்பைத் தடுத்தது மட்டுமல்லாமல், பெண்களின் சமையலுக்கான விறகையும் அளித்தது. இவ்வேலைகளில் பெண்களையே ஈடுபடுத்தினார். அவற்றின் மூலம் சூழலைப் பாதுகாத்தார். பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார். 1986 இல் இவ்வியக்கம் ஆபிரிக்கா முழுவதுக்குமான இயக்கமாக விஸ்தரிக்கப்பட்டது. உலக அரங்கிலும் மிகவும் கவனிக்கத் தக்கதாய் ஆனது. இவ்வியக்கத்தின் வளர்ச்சி சுலபமாக ஏற்பட்டதொன்றல்ல. கென்ய ஜனாதிபதியான டானியல் மொய் (1978-2002) ஆடம்பர வீடுகள் அமைப்புத் திட்டத்திற்காக நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகளை அழிக்க வெளிக்கிட்டார். அதை எதிர்த்து போராடிய வங்கரி மாத்தையை அவர் கைது செய்து சிறையில் அடைத்தார். சர்வதேச மன்னிப்புச் சபையின் கடித இயக்கத்தின் துணையால் அவர் சிறையிலிருந்து மீண்டார். ஒருமுறை (1999) காடுகளை அழிக்கும் திட்டத்தை எதிர்த்து நைரோபியில் மரங்களை நட்டு கொண்டிருக்கையில் தலையில் பலமாக தாக்கப்பட்டார். பலமுறை டானிய மொய்யால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழை நாடுகளின் தீர்க்க முடியாத கடன்களை இரத்து செய்வதற்கான இயக்கத்திலு சேர்ந்து அதன் இணைத் தலைவராகவ இயங்கினார். கென்யப் பெண்கள் தேசி சபையில் தீவிரமாக இயங்கிய இவர் (197 1987) 1981-1987 களில் அதன் தலைவராகவ இருந்தார்.

மாத்தாயின் நீண்ட கால எதிரியாக இருந் டானியல் மொய் 24 ஆண்டு கால ஜனாதிபதியாக இருந்து இறங்கிய பிறகு, 20 டிசெம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலி அங்கத்தவராக 98 வீத வாக்கினைப் பெற் தேர்ந்தெடுக்கப்பட்டார் மாத்தாய். இன்றை ஜனாதிபதியான ம்மாவாய் கிபாபி ஜனவ 2003 இல் சூழலியல், இயற்கை வ காட்டுயிர் அமைச்சுக்கு இவரை உத மந்திரியாகவும் நியமித்துள்ளார். அ பெண்களுக்கான, சூழலியல் போராட்டத்துக் கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டும்.

வங்கரி மாத்தாயின் இயக்கம் தொடர்கிறத பெண்கள் உரிமைப் போராட்ட முடியவில்லை. கென்ய நாவலாசிரியர் நுகெ கூறுவதைப் போல, ஆபிரிக்கப் பெண்கள பயத்திலிருந்தும், மௌனத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். அதுவே, மனத்தை காலனித்துவத்திலிருந்து நீக்குவது (decolo nizing the mind) என்பது. அதை துணிவுடனும், இலட்சியத்துடனும், மூன் குழந்தைகளின் தாயும், கணவனால் கைவிட பட்டு தனியாக வாழும் வங்கரி மாத்தா வெற்றிகரமாகச் செய்து வருகிறார். அ மற்றப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

- என்.கே.எ

# ஷஷ்டியில் இருந்தால் (அகப்பையில்) வரும்

சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது கிராமிய பழமொழி. சட்டியில் உணவுப் பொருள் இருந்தால் தான் அகப்பையில் அள்ளலாம் என்பது வெளிப்படையான கருத்து. ஆனால் இதன் உட்பொருள் யாதெனில் ஷஷ்டியில் விரதமனுட்டித்தால் கருபையில் குழந்தை உருவாகும், (உற்பத்தியாகும்) என்பதாகும். ஷஷ்டி கந்தஷஷ்டி எனப்படுவதால் இது கந்தப்பெருமானை நினைந்து அனுட்டிக்கப்படும் விரதமாகும். ஷஷ்டி விரதம் ஆறு நாட்கள் அனுட்டிக்கப்படுவது. இது மிகவும் முக்கியமான விரதமாகும். தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் அனுட்டித்தால் உரிய பலன் கிடைக்கும்.

**நா. க. சிவராமலிங்கம்**

சஷ்டியில் ஆறு நாட்களும் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விடியற்காலை எழுந்து காலைக்கடன்களை முடித்து நீராடி பின் பூரணகும்பம் வைத்து தருப்பைபரப்பி அதன்மீது சந்தனம் வைத்து, குங்குமம், அட்சதை இட்டு முருகனை அதில் ஆவாகணம் செய்து மலர்தூவி தூபதீபம் காட்டி அர்ச்சித்து வழிபடவேண்டும். ஆறுகாலப்பூசை செய்ய வேண்டும். கந்தன் சரிதம் கேட்க வேண்டும். கந்தஷஷ்டி கவசம், கந்தரனுபூதி கந்தரலங்காரம், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் வெண்பா இவற்றைப் பாராயணம் செய்ய வேண்டும். ஏழாம் நாளில் பாரணை செய்ய வேண்டும்.

மூவிரண்டு அதாவது ஆறு எண்ணுக்கும் முருகனுக்கும் அதிக சம்பந்தம் உளது. அவனது முகங்கள் ஆறு. அவன் ஆறுமுகன் . சிவனுடைய ஐந்து முகங்களோடு அதேமுகமும் சேர்ந்து ஆறுமுகன் ஆயினன். அவனது வீடுகள் ஆறு. அவை படைவீடுகள் எனப்படும். படைவீடுடைய பரமன் அவன். திருப்பரங்குன்றம், திருவேரகம், திரு ஆவினன் குடி, பழனி, திருச்செந்தூர், குன்று தோறாடல் ஆறுபடைவீடுகளாகும். அவனது மந்திரம் 'சரவணபவ' ஆறெழுத்து மந்திரமாகும். அவனது விரதம் கந்தஷஷ்டி ஆறுநாட்களைக் கொண்டது. இது ஆறுமுகனின் வீறுமிக்க விரதமாகும். எனவே மாறு பாடின்றி ஆறுமுகனை அனுதினமும் ஆராதனை செய்தால் எமக்கு தேறுதல் அளித்து எமது எதிரிகளை கூறு செய்து காபாற்றுவான்.

முருகன் பாலன், பாலசுப்பிரமணியன். அதேவேளை கிழவன் குறிஞ்சிநிலக்கிழவன், தலைவன், போகானுபவன். வள்ளி தெய்வயானை சமேதன். அத்துடன்



யோகானுபவன் - ஞானபண்டிதன். அவன் அழகன் - குமரன். அத்துடன் ஆண்டி பழனியாண்டி. இத்தகைய மாறுபட் தன்மைகளால் மக்களைக் கவர்வதி மகாசூரன். கூப்பிட்ட குரலுக்கு ஓடோ வருவதால் அவனை மக்கள், அதிக அளவி கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஆறு முகங்கள் விளைந்த அற்புதங்களை அருணகிரிநாதர் அழகுற அருளியுள்ளார்.

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்களை வினைதீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டு
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

ஓராறு முகமும் ஈராறு கரமும் தீராதவினை தன்னைத் தீர்க்கும்.

தான் பெற்றெடுத்த பத்துக் குழந்தைகளைப் பறிகொடுத்த பின் உயிரோடுள்ள தன் ஒரே குழந்தையைத் தாய் நேசிப்பது போல, உயிருள்ள பிறவி ஒவ்வொன்றையும் நீங்கள் நேசிக்க வேண்டும். - புத்தர்



# யசீர் அரபாத் 1929 - 2004



## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

அரசு பயங்கரவாதம் நடாத்தி ஒரு குறிப்பிட்ட இனத்தை அழித்து ஒழிப்பது நாட்டு பாதுகாப்பு என்றும், பொறுத்து பொறுத்து இருந்து மற்றைய நாட்டினதும் மக்களினதும் உதவிகள் கிடைக்காத நிலையில் அரசு கடைப்பிடிக்கும் அதே நடவடிக்கைகளை வேறு வழியின்றி இன பாதுகாப்பிற்காக விடுதலை இயக்கங்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் அது பயங்கரவாதம் என்றும் மற்றைய நாடுகளால் பட்டம் சூட்டப்பட்டது பாலஸ்தீனர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் பொதுவான ஒன்றாக இருக்கின்றது.

அமெரிக்காவின் அதிபர் பில் கிளிங்டன் காலத்தில் மத்திய கிழக்குநாடுகளில் அதுவும் பாலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையில் சமாதானத்தை கொண்டுவரும் நோக்கத்துடன் எடுத்த முயற்சிகளின் பலனாக பாலஸ்தீனர்களுக்கு ஒரு காலத்தில் சிம்ம சொப்பனமாக இருந்து வந்த இட்சாக் ராபின் என்ற தலைவன் தான் பட்ட அனுபவங்களை மனதில் கொண்டு பாலஸ்தீனர்களை அழிக்கும் நோக்கத்தை கைவிட்டு பயங்கர வாதி என்று தம்மால் விலக்கி வைக்கப்பட்ட யசீர் அரபாத்துடன் கைகுலுக்கி, தோள் கொடுத்து சமாதானமே இஸ்ரேலியர் களுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் ஒரே வழி என்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டனர். அதற்கு யசீர் அரபாத்திற்கும், இட்சாக் ராபினுக்கும் கிடைத்தவை நோபல் பரிசும், ராபினுக்கு உயிரையும் உலை வைத்தது. சமாதானப் பேச்சுக்கள் கைவிடப்பட்டன.

ராபினுக்கு பின்வந்த தலைவர்களுடன் யசீர் சரியான வகையில் சமாதானத்திற்கு வழிவகுக்க முடியாமல் போனதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. 1998 இல் பாலஸ்தீனர்களுக்குக் கிடைக்க இருந்த 94% மான நிலத்தைக் கூட யசீர் ஏற்க மறுத்தார். உலகின் பெரிய பணக்காரர்களை வருடாவருடம் அறிவித்து வரும் Forbes சஞ்சிகை யசீர் அரபாத்தின் சொத்தின் பெறுமதி அமெரிக்க டொலர் 500 மில்லியன்களிலிருந்து, 5 பில்லியன்கள் வரை என்று கணக்கிட்டிருக்கின்றது. மக்களுக்கு தொண்டு செய்ய தனது உயிரையே பணயம் வைத்து செயல்பட்ட ஒரு தலைவனுக்கு தனிப்பட்ட வகையில் சொத்து சேர பணம் எங்கிருந்து வந்தது என்றும், அது அப்பாவி பாலஸ்தீனர்களிடம் சுரண்டிய பணம் என்றும், அமைதி வந்து மக்களால் ஜனநாயகம் வந்தால், தனது எதிர்காலம் இருளும் என்றும் தன்மீது மக்களுக்கு அவ நம்பிக்கை ஏற்பட்டு தான் தற்போது அனுவிக்கும் அதிகாரத்தை இழந்து விட வேண்டும் என்பதற்காகவே சமா-தான பாதையை கைவிட்டார் என்றும் கூறப்படுகின்றது. தனது 62 ஆவது வயதில் 28 வயதான சுகா என்ற பெண்மணியை (கிறிஸ்தவ மதத்தில் இருந்து திருமணத்திற்காக மதம் மாறி இஸ்லாத்தை தழுவிய பெண்) திருமணம் செய்த யசீர் அரபாத்திற்கு தற்போது 9வயதில் மகள் ஒருவர் இருக்கிறார். யசீர் அரபாத் செத்துப் புதைத்த கதையே முடியமுன்பு யசீர் அரபாத்தின் சொத்தினை அடையும் நோக்கத்துடன், அதுவும் பாலஸ்தீனர்களின் பணத்தை அடைய எண்ணி பரீஸ் நகரில் வாழ்ந்து வரும் சுகா அரபாத் பாலஸ்தீன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை செய்து வருகிறார் என்ற செய்தி சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்வதுபோல் இருக்கிறது.

எது எப்படியாக இருந்த போதும் உலகின் பல பாகங்களிலும் வாழும் திக்கற்ற மக்கள் விடுதலை இயக்கங்களை நம்பி இருக்கும் போது இயக்கத்தின் தலைவர்களின் சுய நலமான போக்குகள் கவலை கொள்ள வைக்கின்றது. அதிகாரம் கையில் வந்தால் ஆண்டவனும் ஊழல் செய்வான் என்பது நியதி போலும்.

யசீர் அரபாத்திற்கு பின் அதிகாரத்தை அடையும் மெக்மூட் அபாஸ் பாலஸ்தீனர்களின் சமாதானத்திற்கு வழிவகுப்பார் என்று எதிர் பார்க்கப்பட்ட போதும், மேற்குலக நாடு களுடன் கைகொடுத்து சமாதானத்தை வர வைப்பவர்கள் உதாரணதிற்கு ஆப்கானிஸ் தான், ஈராக் நாட்டு தற்போதைய தலைவர்கள் மேற்குலக நாடுகளின் கைப்பொம்மைகள் என்று முத்திரை குத்தப்படுவதை போல அப்பாசுக்கும் நடக்கலாம். மதங்களால் மக்களின் கண்களை மறைத்து அதை தமக்கு சாதகமாக்கி ஆதாயம் அடையும் கூட்டத்தினர் பாலஸ்தீனர்களின் வாழ்க்கையை தொடர்ந்தும் நரகத்தில் வைத்திருக்காவிட்டால் அதுவே பெரும் புண்ணியம்.

ஒருவேளை தனிப்பட்ட சுயலாப நோக்கத்துடன் பாலஸ்தீனர்களின் நியாயமான கனவை தனக்கு சாதகமாக்கி அதிகாரத்தை அனுப விக்கவும், சொத்து சேர்க்கவும் தான் யசீர் அரபாத் தலைப்பட்டாரோ என்ற ஐயப்பாடுகள் எம் போன்ற சாதாரண மனிதர்களுக்கு தோன்றிய போதும், பாலஸ்தீனர்களின் நியாயமான கனவுகளுக்கு காவலனாக இருந்தவர் என்ற வகையில் அவர் போற்றப்பட வேண்டியவரே.

*சிந்தனை தொடரும்*

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்






வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

HomeLife Higher Standards

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

# அதிசயம் ஆனால் உண்மை




அதிசயம்! ஆனால் உண்மை!! "ஆம்" இந்தியா 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்று ஒருவாறு சமாளித்து அவுஸ்திரேலியாவை வென்று விட்டது, கிரிக்கெட் ரசிகர்களுக்கு நம்பமுடியாமல் உள்ளது. 35 வருடங்களுக்கு பின்பு அதுவும் இந்திய மண்ணில் இந்தியாவை அவுஸ்திரேலியா 2-1 என்று தொடரை வெற்றி கொண்டுள்ளது. இது அவுஸ்திரேலியா விற்கு கிடைத்த சரித்திர வெற்றியாகும். ஆனாலும் கடைசி போட்டியில் அவுஸ்திரேலியாவை 93 ஓட்டங்களுக்குள் மடக்கியது இந்தியாவிற்கு கிடைத்த அதிசயமான ஆறுதல் பரிசு வெற்றியாகும்.

மும்பையில் நடைபெற்ற அவுஸ்திரேலியா வுக்கு எதிரான நான்காவது ரெஸ்ட் போட்டியில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. இந்தப் போட்டிதான், இத்தொடரிலேயே மிக விறுவிறுப்பான போட்டியாக நடைபெற்றது. காரணம் விக்கெட் மழைதான். முழுக்க முழுக்க பந்து வீச்சாளர்களே ஆதிக்கம் செலுத்திய இந்த ஆட்டம், மூன்றாம் நாளே முடிவுக்கு வந்தது. முதல் நாளின் பெரும்பாலான நேரங்களை மழை 'சாப்பிட்டுவிட்ட' போதிலும் இவ்வளவு விரைவாக போட்டி முடிவுக்கு வந்துள்ளது.

இரண்டாவது நாளில் இரு அணிகளையும் சேர்த்து 18 விக்கெட்டுகள் விழுந்தன. மூன்றாவது நாளில் மொத்தம் 20 விக்கெட்டுகள் விழுந்தன. இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 205 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இறங்கிய அவுஸ்திரேலியா, சற்றும் எதிர்பாராவிதமாக 93 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுக்களையும் முரளி கார்த்திக் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். அவுஸ்திரேலிய வீரர்களில் மூவர் மட்டுமே இரட்டை இலக்கை பெற்றனர். 1959-60 ஆம் ஆண்டுக்குப்பிறகு இந்தியாவில் ரெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் மிகக் குறைவான எண்ணிக்கை இதுதான். ஆனால் மெல்போனில் 1981-82 தொடரின் போது இந்தியாவுக்கு எதிராக 83 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததே, அவுஸ்திரே லியாவின் மிகக் குறைந்த பட்ச எண்ணிக்கை யாக இருந்து வருகிறது.

**சாதித்தார் சச்சின்** - முன்னாக விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்கள் என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சைத் தொடங்கியது இந்தியா. துவக்கமே சோதனையாக அமைந்தது. காம்பீரும் சேவாக்கும் விரைவிலேயே பெவிலியன் திரும்பினர். அதற்குப் பிறகு ஜோடி சேர்ந்த லக்ஸ்மன் மற்றும் சச்சின் ஆட்டத்தின் போக்கையே மாற்றி அமைத்தனர். சச்சின் தனது பழைய அதிரடி ஆட்டத்தின் மூலம் ரசிகர்களை மகிழ்வித்தார். ஹௌரிட்ஜ் பந்தில் அவர் அடித்த சிக்ஸர், தான் இன்னமும் சூராதி சூரன்தான் என்பதை சொல்லாமல் சொல்லியது. 55 ஓட்டங்கள் எடுத்தார் சச்சின்.

லக்ஸ்மனும் இந்தத் தொடரின் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பவுண்டரிக ளாக விளாசினார். அணியிலேயே அதிக பட்சமாக 69 ஓட்டங்களை குவித்தார் லக்ஸ்மன். இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்கு 91 ஓட்டங்களைக் குவித்தது. அதற்குப் பிறகு வந்தவர்களில் திராவிடும் கைஃபும் சொல்லிக் கொள்ளுமளவுக்கு ஆடினர்.

**கிளார்க் மந்திரப் பந்துவீச்சு** -

மட்டைவீச்சில் கலக்கி வரும் அவுஸ்திரேலிய இளம் வீரர் கிளார்க், இம்முறை பந்துவீச்சில் தனது திறமையைக் காட்டினார். அவரது மந்திரப் பந்துவீச்சுக்கு 6 இந்திய வீரர்கள் பலியாகினர். 6 ஓவர்களை வீசிய கிளார்க் வெறும் 9 ஓட்டங்களை மட்டுமே கொடுத் தார். இந்தியாவின் கடைசி 6விக்கெட்டுக்கள், வெறும் 23 ஓட்டங்களுக்கு வீழ்ந்தன.

**அவுஸ்திரேலியா திணறல்** - அவுதிரேலியாவுக்கு தொடக்கமே சோதனை யாக அமைந்தது. லாங்கரை வீழ்த்தி நம்பிக்கை அளித்தார் ஜாகீர் கான். அதைத் தொடர்ந்து முரளி கார்த்திக்கின் மாயாஜாலம் ஆரம்பமானது. அணித்தலைவர் பாண்டிங் கையும் அபாரமான பார்மில் இருக்கும் மார்ட்டினையும் சாய்த்தார் முரளி கார்த்திக். மார்ட்டின் ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை. பின்னர் ஹர்பஜன் தம் பங்குக்கு விக்கெட்டுக்களை வீழ்த்திக் கொண்டே இருந்தார். வழக்கம் போல மாத்யூ ஹேடன் இம்முறையும் ஹர்பஜனிடம் வீழ்ந்தார். கிளார்க், கில்கிறிஸ்ட், காடிச் ஆகியோரும் விரைவிலேயே ஆட்டமிழந்தனர். ஹர்பஜன் பந்தில் டெண்டுல்கரிடம் காட்ச் (Catch) கொடுத்து ஆட்டமிழந்தார் கில்கிறிஸ்ட். ஒரு கட்டத்தில் 7 விக்கெட் இழப்புக்கு 58 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது அவுஸ்திரேலியா. விரைவாக ஓட்டங்களைக் குவிக்க முயற்சித்து அவுஸ்திரேலியா வீரர்கள் வீழ்ந்தனர். அதற்குப் பிறகு கில்லெஸ்பி-ஹௌரிட்ஜ் இணை 8-வது விக்கெட்டுக்கு 20 ஓட்டங்களைக் குவித்ததால் ஆட்டத்தில் பரபரப்பு கூடியது. அப்போது ஹௌரிட்ஜை கும்ப்ளே வீழ்த்தினார். எனினும் கில்லெஸ்பியும் காஸ்ப்ரோவிசும் வெற்றிக்கு மிக அருகாமை யில் அவுஸ்திரேலியாவை அழைத்துச் சென்றனர். ஆனால் காஸ்பரோவிசையும் மெக்ராத்தையும் அடுத்தடுத்து ஹர்பஜன் வீழ்த்த வெற்றி வசப்பட்டது.

**ஆட்ட நாயகன்** - 10.5 ஓவர்களில் 29 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ஹர்பஜன். முரளி கார்த்திக் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தி னார். முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார் கார்த்திக். அவரே ஆட்ட நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார். கும்ப்ளே, ஜாகீர் கான் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

**தொடர் நாயகன்** - போட்டித் தொடர் நாயகனாக அவுஸ்திரேலியாவின் டேமியன் மார்ட்டின் தேர்வு செய்யப்பட்டார். கடைசிப் போட்டியில் வெல்லாதது ஏமாற்ற மளிப்பதாகத் தெரிவித்தார் அவர். இத தொடரில் அதிக பட்சமாக 444 ஓட்டங்களைச் சேர்த்தது அவருக்கு தொடர் நாயகன் விருதைப் பெற்றுத் தந்தது. அதையடுத்து 4 போட்டித் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றதால் அவுஸ்திரேலியாவுக்கு பார்டர் - காவஸ்கர் கோப்பை வழங்கப்பட்டது.

## முரளி கார்த்திக்குக்கு பரிசு, பதவி உயர்வு - லாலு அறிவிப்பு.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற 4-வது ரெஸ்ட் போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு அடிகோலிய முரளி கார்த்திக்குக்கு ரொக்கப் பரிசும், பதவி உயர்வும் அளிப்பதாக மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ் அறிவித்துள்ளார். முரளி கார்த்திக், இந்திய ரயில்வே அணிக்காக விளையாடி வருகிறார். கடைசி ரெஸ்ட் போட்டியில் மொத்தம் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி, ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார். கடைசி ரெஸ்ட் போட்டியில் வென்ற இந்திய அணிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் லாலு பிரசாத் யாதவ். மேலும் இந்த வெற்றியில் முக்கிய பங்காற்றியதற்காக முரளி கார்த்திக்குக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசும், பதவி உயர்வும் அளிப்பதாக லாலு அறிவித்துள்ளார். மிகவும் இக்கட்டான கட்டத்தில் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடி தந்துள்ளார் முரளி கார்த்திக் என்று அவர் பாராட்டியுள்ளார்.

**7000 ஓட்டங்களைக் கடந்தார் திராவிட்** - ரெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 7000க்கு மேற்பட்ட ஓட்டங்களைச் சேர்த்த 3-வது இந்திய வீரராகத் திகழ்கிறார் ராகுல் திராவிட். மேலும் 7000க்கு மேற்பட்ட ஓட்டங் களைப் பெறும் உலகின் 24-வது வீரராகவும் அவர் திகழ்கிறார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற ரெஸ்ட் போட்டியின் 3-வது நாள் ஆட்டத்தில் இச்சாதனையை அவர் படைத்தார். சுநீல் காவஸ்கர், சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் மட்டுமே 7000 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த இந்திய வீரர்களாவர். முன்னதாக அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸின் போது ரெஸ்ட் போட்டிகளில் அதிக கேட்ச்களைப் பிடித்த இந்திய வீரரானார் திராவிட்.

## பாகிஸ்தான் & சிறீலங்கா தொடர்

கராச்சியில் நடைபெற்ற சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது ரெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதல் ரெஸ்ரில் சிறீலங்கா வெற்றி பெற்றது. இரண்டாவது ரெஸ்ரில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்துள்ளது. பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டி கராச்சியில் உள்ள நேஷனல் 28அம் திகதி முதல் 1ஆம் திகதி வரை 5 நாட்கள் நடைபெற்றது. முன்னதாக ரொஸ்சில்(toss) வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி பீல்டிங் செய்ய தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் 208 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது. முதல்நாளே முடிவடைந்த இலங்கை இன்னிங்சில் கலுவிதரனா அதிகபட்சமாக 54 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்தபடியாக அணித்தலைவர் அட்டப்பட்டு 44 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் தரப்பில் அப்துல்ரசாக் சிறப்பாக பந்துவீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுகளை வீழ்த்தினார். அடுத்த படியாக இளம் சுழற்பந்து வீச்சாளரான டேனிஷ்கனேரியா மூன்று விக்கெட்டுகளை எடுத்தார்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை துவக்கிய பாகிஸ்தான் அணி ஆட்டநேர இறுதியில் 4விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களை எடுத்தது. அப்போது அணித்தலைவர் இன்சமாம் 79 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். பின்பு 3ஆம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் முதல் இன்னிங்சைத் தொடர்ந்தது.

**எஸ். கணேஷ்**

அந்த அணி 137.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 478 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் இன்சமாம் (117) மற்றும் யூனிஸ்கான் (124) ஆகியோர் சதமடித்தது ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இலங்கை தரப்பில் வாஸ் மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். தவிர ஹெராத் இரண்டு விக்கெட்டை எடுத்தார். அதன் பிறகு இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த இலங்கை அணி 3ஆம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஜெயசூர்யா 97 ஓட்டங்களுட னும், சங்கக்காரா 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

4 ஆம்நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை 111 ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்து 361 ஓட்டங்களை எடுத்தது. ஜெயசூர்யா மற்றும் சங்கக்காரா ஆகியோர் சதமடித்தது ஆட்டத்தின் சிறப்பம்பமாகும்.

5 ஆம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி, அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 406 ஓட்டங்களை எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் டேனிஷ்கனேரியா 2வது இன்னிங்சிலும் சிறப்பாக பந்துவீசி 116 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை எடுத்தார்.

139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு பாகிஸ்தானிற்கு வைக்கப்பட்டது. அந்த அணி 37 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அந்த அணி ஒரு கட்டத்தில் 57 ஓட்டங்களில் 4விக்கெட்டுகளை இழந்து தடுமாறிக்கொண்டிருந்தது. அதன் பின்பு சோயிப் மாலிக் (53), அப்துல்ரசாக் (35), இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டு வெற்றி தேடித்தந்தனர். இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகனாக டேனிஷ் கனேரியாவும், தொடர்நாயகனாக ஜெயசூர்யாவும் தேர்வு செய்யப் பட்டனர்.






நீங்கள் புதிய வீட்டுக்கு
செல்லத் தயாராகுங்கள்!
நான் Mortgage
விடயங்களைப்
பார்த்துக்கொள்கிறேன்!
0% Down

| 5% | 4.5% | From 1.75% |
|---|---|---|
| 5years | 3years | Variable |

Switch, Re Finance, Debt Consolidation
Bad or No Credit
100 FREE AIR MILES TO ALL MY CLIENTS
CENTUM Looking out for your best interest
CENTUM Advance Realty Inc.
80 Corporate Dr., Ste 203, Toronto, ON, M1H 3G5
jerad_emmanuel@centum.ca



Jerad Emmanuel
Mortgage Specialist
Business: 416.290-1200
Cell: 416-908-7066

# 2005இல் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீட்டுச்சந்தை




## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

கனடிய வீட்டிற்கு மோட்கேஜ் காப்புறுதி வழங்கும் CMHC என அழைக்கப்படும். (Canadian Mortgage and Housing Corporation) நிறுவனம் 2005ஆம் ஆண்டில் வீட்டின் விலை மாற்றம் எவ்வாறு இருக்கலாம் என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. வருடாவருடம் இப்படியான எதிர்கால அறிக்கையை வெளியிடுவது, இந் நிறுவனத்தின் வழமை. இன்றைய காலகட்டத்தில் Energy இன் விலை அதிகரித்து கொண்டு செல்வதால் அல்பேட்டா (Alberta), பிரிட்டிஸ் கொலம்பியா (Britsh Columbia) மற்றும் சஸ்கச்சுவான் (Saskatchewan) போன்ற மாகாணங்கள் நன்மை அடையும். ஆனால் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஒன்ராரியோ (Ontario), கியூபெக் (Quebec) போன்ற மாகாணங்கள் பொருட்களை உற்பத்தி செய்வதில் (Manufacturing Sector) வருமானம் தங்கியுள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் கனடிய டொலர் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் மந்த நிலையை ஏற்படுத்தக்கூடும். இதற்கு மறுதலையாக இதுவரை எதுவித இறக்கத்தையோ, தாக்கத்தையோ ஏற்படுத்தவில்லை. அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியே இதற்கு காரணமாகக் கொள்ளலாம். கனடாவில் வருடாவருடம் சராசரியாக 65,000 இலிருந்து 75,000 வரையான புதிய வேலைகள் உருவாக்கப்படும், இருந்தும் 2003ஆம் ஆண்டு 100,000 இற்கு மேற்பட்ட வேலைகள் உருவாக்கப் பட்டன. இந்த வேலைத்திட்டத்தில் 45 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்ட வயதினரே அதிகவேலையைப் பெற்றுள்ளனர். இதனால் இரண்டாம் தடவை வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கை, எதிர்காலத்தில் முதல்தடவை வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கையை விடக்கூடியதாக காணப்படும்.

ரொறொன்ரோ பெரும் பாகத்தில் வந்துசேரும் மக்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் பெரிதாகக் குறையும் என எதிர்பார்க்கமுடியாது. வட்டிவீதம் மெல்ல மெல்லமாக மேல் நோக்கி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த 40 வருடங்களில் ஆகக் குறைந்ததாக இருந்த வட்டி வீதம் இப்பொழுது மேல்நோக்கி செல்கின்றது. பணவீக்கமும், வளரும் பொருளாதாரமும் இதற்கு காரணமாகக் கருதப்படுகின்றது. பொருளாதார நிபுணர்களின் எதிர்வு கூறலின்படி வட்டிவீதம் தொடர்ந்தும் அதிகரிக்கும் என அறியப்படுகின்றது. இதனால் 2005ஆம் ஆண்டின் வருடக்கடைசியில் இப்பொழுது காணப்படும் வட்டி வீதத்திலிருந்து ½% முதல் 1% வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கலாம். வீட்டின் விலையின் அதிகரிப்பும், வட்டி வீத அதிகரிப்பும் மக்களால் வீடு வாங்குவதற்குரிய தகமையை குறைக்கும். முதல் தடவையாக வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவடையும். வீட்டுச் சந்தையில் அதிகவீடுகள் விற்பனைக்கு வருவதும், புதிதாக கட்டப்படும் வீடுகளின் விலை அதிகமாகக் காணப்படுவதாலும் திரும்ப விற்கப்படும் வீடுகள் (Resale Houses) கூடியளவு விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழமையை விட அதிக வீடுகள் சந்தைக்கு விற்பனைக்கு வருவதும் வீட்டின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மாகாண அரசின் நிலம் சம்மந்தமான இறுக்கமான சட்டமும், நிலத்தின் (Vacant Land) விலை ஏற்றமும் புதிதாக உருவாக இருக்கும் வீடுகளில் ஏற்படுத்த இருக்கும் விலை அதிரிப்பு, எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை குறைக்கக்கூடிய சாத்தியங் கள் காணப்படுகின்றது. இதனால் வீடு நிர்மாணம் செய்யும் சிறிய கொம்பனிகள் தமது நிறுவனங்களை மூடிவிடக்கூடும். முதல்தடவை வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கை குறையலாம்.

விலைகூடிய வீடுகளை வாங்குபவர்கள், அநேகமானவர்கள் வீட்டுச்சந்தையுடன் பரீட்சயம் உடையவர்களாவும் இருப்பார் கள். விலை கூடிய வீடுகளை வாங்க விரும்பும் இவர்கள் நிதானமாக யோசித்து வீடு வாங்குவதால், விலைகூடிய வீடுகள் சந்தையில் நீண்டகாலம் இருக்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

2005இல் போட்டியாக வீடு வாங்கும் நிலைமை (Bidding wars) காணப்படாது. அதிகரிக்கும் Vacancy Rate, முதலீட்டாளர்களை முதலீடு செய்வதிலிருந்து தடுக்கும். 2005ஆம் ஆண்டுப் பகுதியில் விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை புதியதும் (New), பழையதும் (Resale) குறையலாம். ஆனால் சராசரி வீட்டின்விலை பெரியளவில் குறையும் என்று சொல்ல முடியாது. ஓரளவு சீராகவே காணப்படும். வட்டிவீதம் அதிகரிக்கும்; Vacancy Rate அதிகரிக்கும். எனவே 2005ஆம் ஆண்டு வீட்டுசந்தையில் விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையில் இறக்கத்தை கொண்டுவரலாம் என்றும் 2006ஆம் ஆண்டிலும் இந் நிலைமை தொடரலாம் எனவும் CMHC எதிர்வு கூறியுள்ளது.




**New Listing**

**Finch/Mccowan**



**$350,000**

**Detached**
4+2 Bedrooms
4 Washrooms
sep. entrance
2 Kitchens

**New Listing**

**Hwy 10 / Dundas**



**$204,900**

**Commercial/Retail**
No Restriction For
The Business Hours.
Big Window Exposure,
Unit Has Great Indoor &
Outdoor Exposure.

**New Listing**

**Neilson/Sheppard**



**$199,900**

**Townhouse**
3 Bedrooms
2 Washrooms
1 Kitchen

**Roseland/Harwood**
**Brand New**



**$368,000**
**Detached**
4 Bedrooms
3 Washrooms
9' Ft Ceiling
3000 Sqft

**Morningside/Ellesmere**



**$119,900**
**Condo Apt.**
2+1Bedrooms
2 Washrooms
Clean Unit

**Warden/Finch**




**$124,900**
**Condo Apt.**
1 Bedrooms
1 Washrooms
Parking

**Sheppard/Medowvale**
**Brand New**



**$252,900**
**Condo Apt.**
3 Bedrooms
2 Washrooms
New

**Markham/Sheppard**



**$289,900**
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchens
4 Level Split

**Affordable Homes in Toronto**

| | | |
|---|---|---|
| 4 BR Detach | Roseland/Harwood, Toronto | $289,900 |
| 3 BR Townhome | Finch/Tapscott, Toronto | $214,000 |
| 1+1 BR Condo | Warden/Finch, Toronto | $128,000 |
| 3+2 BR Detach | Finch/Mccowan, Toronto | $350,000 |
| 2+1 BR Con. TH. | Morningside/Ellesmer, Toronto | $119,900 |
| 2 BR Condo | Neilson/Mclevin, Toronto | $159,900 |
| 3 BR TH | Neilson/Sheppard, Toronto | $178,000 |
| 2 BR Condo | Mclevin/Tapscott, Toronto | $179,900 |
| 3+2 BR Semi | Morningside/Sheppard, Toronto | $239,000 |
| 3 BR Att. TH | Meadowvale/Sheppard, Toronto | $252,000 |
| 4+2 BR Detach | Markham/Sheppard, Toronto | $289,900 |
| 2 BR Condo | Neilson/Mclevin, Toronto | $179,900 |

**Exclusive**

**Finch/Tapscott**

3 Bedrooms
2 Washrooms
2 Kitchen

**$214,000**

**For Rent**

**Neilson/Mclevin**

**Condo Apt.**
2 Bedrooms
2 Washrooms
Parking



**$1350**

**ராஜா மகேந்திரன்**
Broker/Owner

**Cell: 416.315.9397**
**Off : 416.321.6969**



**HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3**

# யசீர் அரபாத்தின் மறைவும் பலஸ்தீனியத்தின் விடிவும்

• பிறப்பு ஓகஸ்ட் 04, 1929 - ஜெருசேலம். பிறப்பு பதிவு ஓகஸ்ட் 24, 1929 - கெய்ரோ.

• 1948 - இஸ்ரேல் - அரபு யுத்தத்தில் பங்கெடுப்பு.

• 1952 - 1956 தலைவர் - பாலஸ்தீனிய மாணவர் அமைப்பு.

• 1956 - Civil Engineer பட்டதாரியானார்.

• அதே ஆண்டு சூயஸ்கால்வாய் போரில் Second Lieutenant ஆக எகிப்திய இராணுவத்தில் பங்கேற்றார்.

• குவைத்தில் - பொறியியல் நிபுணராக வேலை. பின்னர் சொந்தமாக நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார்.

• 1957 - Fatah -'The Victory through jihad' என்ற அமைப்பை உருவாக்கினார்.

• 1967 - 1968 பாலஸ்தீனிய அமைப்புக்கள் ஒன்று சேருகின்றன.

• பெப்ரவரி 03, 1969 - பாலஸ்தீனியத்தின் தலைவராகினார். (Ahmad -Shukeiri இன் இடத்திற்கு)

• செப்ரெம்பர் 1972 - Munich ஒலிம்பிக்கில் 11 இஸ்ரேலிய வீரர்களை கடத்தி, பின்னர் கொலை செய்கிறது இவரது Fatah அமைப்பு.

## ரதன்

• 1985 - Tunisa வில் பாலஸ்தீனிய தலைமையகத்துக்கு இஸ்ரேல் குண்டு வீசிய பொழுது Walking சென்ற படியால் தப்பிவிடுகிறார்.

• நவம்பர் 15, 1988 - பாலஸ்தீனிய பிரதேசம் அமைக்கப்படுகிறது. (Westbank, Gaza strip)

• நவம்பர் 02, 1989 - பாலஸ்தீனிய பிரதேச தலைவராக தேர்ந்தேடுக்கப்படுகிறார்.

• 1990 - Suha Tawil என்ற Orthodox Christian பெண்மணியை மணமுடிக்கிறார். Suha திருமணத்துக்கு முன்பு முஸ்லீமாக மதமாற்றம் செய்கிறார்.

Suha 1963இல் பிறந்தவர். தகப்பன் - வங்கி அதிகாரி. தாய் Raymonda Pawil - பாலஸ்தீனிய முக்கிய அரசியல் தேசிய



கவிஞர். இவர் ஜெருசலத்தில் பாலஸ்தீனிய Press Service ஐ நடாத்தியவர்.

Suha - முதலில் Free lance Journalist ஆகவும், பின்னர் மக்கள் தொடர்பு அதிகாரியாக அரபாத்தின் அலுவலகத்திலும், அதன் பின்னர் பொருளாதார நிபுணராக அதே அலுவலகத்தில் கடமையாற்றினார்.

• 1993 - Shimon Peres, Yitzhak Rabin உடன் இணைந்து நோபல் பரிசை பெற்று கொண்டார்.

• இவரது தனிப் பட்ட சொத்தின் தொகை $1.3 Billion என கூறுப்படுகிறது. Forbes சஞ்சிகையும் இவரை பெரிய கோடி சுவர்கள் பட்டியலில் சேர்த்துள்ளது. 2003இல் அரபாத் தின் நிதி அமைச்சு அமெரிக்க கணக் காளர்களைக் கொண்டு (Auther Anderson ????) நடாத்திய கணக்கெடுப்பின்படி சுமார் $1 Billion.

• IMF இன் படி 900 Million பாலஸ்தீனிய பொதுப்பணம் இவரிடமுள்ளது என்கிறது. ஆனால் இன்று இவரது நிதிநிறுவனப் பொறுப்பு இவரது மனைவியின் கையில்.

மென்மையான போக்கு கொண்ட யாசீர் அரபாத்தே இன்றைய பாலஸ்தீனிய தோல்விக்கு காரணம் என்ற விமரிசனம் கடுமையாகவே முன்வைக்கப்படுகிறது.

ஆனாலும் பயங்கரவாத அமைப்பாக மேற்கோள் சுட்டிக் காட்டப்பட்ட பாலஸ்தீனிய அமைப்பை உலகெங்கும் உள்ள மக்கள் ஆதரவு அமைப்பாக கட்டியெழுப்பியதில் இவரது பங்கு முக்கியமானது. அதன் பரிமாணங்களை ஆய்வு செய்வது இன்றைய தேவையாகும்.

## புதிய தலைவர் யார்?

1. பிரதமர் - Ahmed Qureia
2. முன்னாள் பிரதமர் - Mahmoud Abbas
3. Nabil Shaath - வெளிவிவகார அமைச்சர் Western Style
4. yasee - Abed Rabbo முன்னாள் தொடர்பு கலாச்சார அமைச்சர். இடதுசாரி
5. Mohammed - Dahlan - முன்னாள் பாதுகாப்பு தலைவர் - Gaza பிரதேசத்தில் 1961 இல் அகதி முகாமொன்றில் பிறந்தவர்.
6. J. Bril Rajoub - 15வயதில் 17 வருடங்காலம் சிறை சென்றவர். பாதுகாப்பு ஆலோசகர்.



## தமிழன்னையின் வீரப்புதல்வர்கள்

ஊர்யாவும் தீயில் உழன்றிட்டாலும்
வேர்யாவும் வெள்ளத்தில் அரிக்கப்பட்டாலும்
போர்க்காயங்கள் சுமந்திட்ட போதும்
குருதியாய் மண்ணது சிவந்தனவென்றாலும்
தமிழர்களின் தலையது சாய்திடவில்லை
மாயப் பிசாசுகள் வெறியாட்டம் போடினும்
கோரமாக மண்ணில் கும்மாள மிட்ட போதும்
புடைத்தெழுந்தன புத்துயிர் தளிர்கள்
வீசிய செந்தணல் மூச்சியே
நீறின யாவும் நிமிர்தன மண்ணில்
பசிய நிலமென வானது தொட்ட கடலுடன்
தாய் மண்ணது.
இன்று வீரப்புதல்வர்களை
மடிதனில் தாங்கியபடி.

- எஸ். பானுகா

## வெற்றிக் கரும்புலி

வாழைத் தண்டிலும் இன்று
வைரம் பாய்ந்தது
கோழை உடம்பிலும் இன்று
குருதி ஓடிற்று

இரவு நேரமும் இன்று
பகலாய் ஆனது
மாரி காலமும் இன்று
கோடையானது

பூனை வாயிலும் இன்று
புலிப்பல் முளைத்தது
புல்லும் பாம்பென இன்று
பொங்கி எழுந்தது

வெல்லும் கரும்புலி இன்று
வெற்றி கண்டது
கல்லும் தூபியாய் இன்று
நெடுதுயர்ந்தது.

- உதயகரன் துரை


LARGE INDOOR PUBLIC CAR AUCTION

EVERY WEDNESDAYS EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
• G.M. • FORD
• CHRYSLER • HONDA
• NISSAN • TOYOTA
• V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.




WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# இரண்டு இடியப்பம் பசியைப் போக்குமா?

# Diabetes VII

ஒருவருடைய உணவு அட்டவனையைத் தெரிவு செய்வதென்றால், அதை கண்ணை மூடிக்கொண்டு தெரிவு செய்ய முடியவே முடியாது. ஆனால் நமது அன்றாட வாழ்வில் நாம் கண்ணை மூடிக்கொண்டுதான் நமது உணவுத் தெரிவை செய்து கொண்டிருக்கின்றோம்.

## செழியன்

'நேற்றைக்கு கோழி இறைச்சியும், கத்தரிக்காய் பிரட்டலும், பருப்பும் வைச்சனாங்கள். இண்டைக்கு என்னப்பா செய்யிறது? உருளைக் கிழங்கும், தக்காளியும் போட்டு ஒரு குழம்பு வைக்கட்டே?' என்று சட் என்று கேட்டு, பட் என்று செய்யுமாப்போல் இது ஒன்றும் இலேசான காரியம் இல்லை. ஆனால் எல்லாரும் சமையலை வெகு இலேசாகத்தான் எடுத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் கஸ்டப்பட்டு பல மணி நேரம் சமைக்கின்றார்கள்.

பசிக்கு என்னத்தைதான் வயிற்றுக்குள் போட்டால் என்ன? என்பது தான் பொதுப்படையான சிந்தனை. விளைவு என்ன? இலங்கையர்கள் பலர் கனடாவில் மரணத்தை தழுவி உள்ளனர். இச்சமயத்தில், மரணத்தை கண்டு நாம் அஞ்ச மாட்டோம் மரணம் அது வாழ்வின் முடிவல்ல என்று அழகாக கவிதை பாடமுடியாது. ஏற்கனவே கடந்த இதழில் பார்த்தோம், நீரழிவு நோயால் பாதிக்கப்பட்ட 61 வயதும், 167 செ.மீற்றர் உயரமும், 59 கிலோ கிராம் Ideal weight ம் உடைய ராணி, நாள் ஒன்றுக்கு 205 கிராம் மாப்பொருளும், 54.6 கிராம் கொழுப்பும், 82 கிராம் புரதத்தையும் உண்ணவேண்டும் என்று. உணவுத் தெரிவு என்று வரும்போது இந்த அளவு கோல் மட்டும் போதாது. வேறு என்ன அளவு கோல் வேண்டும்?

Health Canada வின் Healthy Eating Food Guide இன்படி ஒரு நாளைக்கு ஒருவர் கண்டிப்பாக, 5-10 Servings மரக்கறி மற்றும் பழங்களை உண்ணவேண்டும். அது மட்டுமல்ல, பெண்கள் 3-4 Servings பால் உணவுப் பொருட்களை உண்ணவேண்டும். இதனையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொண்டே நாம் ராணியின் உணவுத் தெரிவை செய்யமுடியும்.

**உணவுப் பொருட்களில் Extra vegetables என்ற ஒரு வகையறாவும் Free food என்ற இன்னொரு வகையறாவும் உள்ளன. இந்த வகைக்குள் அடங்கும் உணவுப்பொருட்களை பசியை போக்குவதற்காக மேலதிகமாக எடுக்கலாம்.**

இதன் அடிப்படையில் ராணியின் உணவுத் தெரிவை செய்வோமாயின், பின்வரும் ஒரு தெரிவுக்கு நாம் போகலாம். இது ராணியின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும்.

இதே உணவை தினமும் உண்ண வேண்டும் என்ற எந்த அவசியமும் ராணிக்குக் கிடையாது. ஒரு Dietitian உதவியுடன் பல விதமான உணவுத் தெரிவுகளை ராணி செய்து கொள்ளலாம்.

ராணிக்கு பிட்டு சாப்பிட வேண்டும் என்ற ஒரு விருப்பம் ஏற்பட்டால் தாராளமாக சாப்பிடலாம். ஏற்கனவே மேலே உள்ள உணவுத் தெரிவில் உள்ள காலைச் சாப்பாடான corn flakes 1 கப் (175 ml) க்குப் பதிலாக தேங்காய்ப் பூ இல்லாமல் இரண்டரை சில்லு பிட்டும், 1 கப் பருப்புக் கறியும் (எண்ணெய் சேர்க்காமல் செய்தது) சாப்பிட்டால் கிட்டத்தட்ட சம அளவான மாப்பொருளையும், புரதத்தையுமே ராணி சாப்பிடுவார். இடியப்பம் சாப்பிடவேண்டும் என்றால் இரண்டு சிறிய இடியப்பமும், 1 கப் பருப்புக் கறியும் (எண்ணெய் இல்லாமல் செய்தது) சாப்பிடலாம். இட்டலி சாப்பிடவேண்டும் என்றால் காலை பத்து மணி சாப்பாடான Bagel, 1 tsp மாஜரினுக்குப் பதிலாக இரண்டு இட்டலியையும், 1 கப்புக்கும் சற்ற குறைவான பருப்புக் கறியும் சாப்பிடலாம்.

| நேரம் | மாப்பொருள் | கொழுப்பு | புரதம் | கலோரி |
|---|---|---|---|---|
| காலை: 7.00 | | | | |
| corn flakes 1 கப் (175 ml) , | 22.50 கிராம் | - | 3 கிராம் | 102 |
| 1 கப் பால் (Homo) | 12 கிராம் | 8கிராம் | 8 கிராம் | 152 |
| தோடம்பழம்- சிறியது | 10 கிராம் | - | 1 கிராம் | 44 |
| தண்ணீர் | - | - | - | - |
| காலை 10.00 | | | | |
| ½ கப் பால் (Homo) | 6 கிராம் | 4 கிராம் | 4 கிராம் | 76 |
| ½ Bagel | 15 | - | 2 | 68 |
| மாஜரின் 1 tsp | - | 5 கிராம் | - | 45 |
| மதியம் 1.00 | | | | |
| சோறு 1 கப் | 45 கிராம் | - | 6 கிராம் | 204 |
| சல்மன் ஒரு துண்டு (30 கிராம்) | - | 3 கிராம் | 7 | 55 |
| Mix vegetable 90 கிராம் | 10 கிராம் | - | 1 கிராம் | 44 |
| மாஜரின் 2tsp | - | 10 கிராம் | - | 90 |
| அரை கப் போஞ்சி அல்லது புரோகளி அல்லது காளான் அல்லது Bok choy. (ஏதாவது ஒன்று) | - | - | - | - |
| water malon (1 cup) | 10 | - | 1 | 44 |
| தண்ணீர் | - | - | - | - |
| மாலை 4.00 | | | | |
| சலாட்: Lettuce, cucumber and Onion With ¼ chicken breast (No salad dressing) | - | .88 கிராம் | 7.69 கிராம் | 38.68 |
| தண்ணீர் | - | - | - | - |
| இரவு 7.00 | | | | |
| சோறு 1 கப் | 45 | - | 6 கிராம் | 204 |
| Steak ( Raw- 150 g boneless) | - | 12 | 21 | 192 |
| Plan yogurt (4%- 125ml) | 6 | 4 | 4 | 58 |
| அப்பிள் சிறியது (பாதி) | 10 | - | 1 | 44 |
| தண்ணீர் | - | - | - | - |
| இரவு 10.00 | | | | |
| 1 கப் பால் (Homo) | 12 கிராம் | 8 கிராம் | 8 கிராம் | 152 |
| | 203.5 | 54.88 | 80.69 | 1630.68 |

இப்படியே ஒன்றுக்கு பதிலாக இன்னோர் உணவுப் பொருளை ராணி சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் ராணிக்கு உணவுப் பொருட்களைப் பற்றிய அறிவு கிடையாதே. அதனால் தான் ராணி உடனடியாக ஒரு Dietitian உதவியை நாடவேண்டும் என்று கூறுகின்றேன்.

வழமையாக பதினைந்து அல்லது இருபது இடியப்பங்களை ஒரு நேர சாப்பாடாக சாப்பிட்டவருக்கு இரண்டு இடியப்பம் பசியை போக்கி விடுமா? என்ற ஒரு சந்தேகம் எழுந்தால் அது நியாயமான சந்தேகமே. இந்த பசிப் பிரச்சினையை எப்படிப் போக்கலாம்?

முன்பு ராணி பதினைந்து இடியப்பங்களை ஒரு



நேரமாக சாப்பிட்டிருந்தாலும், ஏறத்தாள ஏழு அல்லது எட்டு மணி நேரத்தின் பின்னரே அடுத்த நேரம் சாப்பிட்டிருப்பார். ஆனால் நமது புதிய உணவு பழக்க வழக்கத்தின்படி நான்கு மணி நேரத்தில் அடுத்த கட்ட உணவை ராணி உண்ணுகின்றார். எனவே இரண்டு இடியப்பங்களை சாப்பிட்ட பின் வருகின்ற பசியின் போது ராணி அடுத்த கட்ட உணவை உண்டுவிடுவார்.

அது மட்டுமல்ல இந்த பசிப்பிரச்சினைக்கு இன்னொரு தீர்வும் உள்ளது. அது என்ன?

உணவுப் பொருட்களில் Extra vegetables என்ற ஒரு வகையறா உள்ளது. அது மட்டுமல்ல Free food என்ற இன்னொரு வகையான உணவப் பொருட்களும் உள்ளன. இந்த வகைக்குள் அடங்கும் உணவுப் பொருட்களை ராணி பசியை போக்குவதற்காக மேலதிகமாக எடுக்கலாம். இந்த உணவுப் பொருட்கள் மாப்பொருள், புரதம், கொழுப்பு கணிப்பீடுகளுக்குள் வருவதில்லை.

Asparagus, Bok choy, Cauliflower, Celery, Cucumber, Green, red, yellow peppers, Zucchint, போஞ்சி, புரோக்களி, லீக்ஸ், கோவா, காளான், வெங்காயம், கீரை என்பன Extra vegetables என்ற வகையறாக்களில் வருகின்றன. இந்த மரக்கறிகளில் ஒன்றையோ அல்லது பல மரக்கறிகளின் கலவையோ, அரை கப் (125 ml) ராணி தனது உணவில்

**வழமையாக பதினைந்து அல்லது இருபது இடியப் பங்களை ஒரு நேர சாப்பாடாக சாப்பிட்ட வருக்க இரண்டு இடியப் பம் பசியை போக்கி விடுமா? என்ற ஒரு சந்தேகம் எழுந்தால் அது நியாயமான சந்தேகமே. இந்தப் பசிப் பிரச்சினையை எப்படிப் போக்கலாம்?**

சேர்த்துக் கொள்ளலாம். அதற்கு மேல் சேர்த்துக் கொண்டால் அது ஒரு மரக்கறி தெரிவு என்ற கணக்கில் வந்து விடும்.

இரண்டு இடியப்பதுடன் அல்லது ஒரு கப் சோற்றுடன் இவற்றை எப்படி சேர்த்துக் கொள்வது?

ஒரு சாம்பார் வைக்கலாம். அல்லது இவற்றை அவித்து பின்னர் சோயா சோசில் பிரட்டி எடுத்துக் கொள்ளலாம். அல்லது போனால் இவற்றோடு இடியப்பத்தை சேர்த்து இடியப்ப புரியாணி, அல்லது சோறு புரியாணி செய்து கொள்ளலாம். இது மட்டுமே, ஒரு நேர பசியை வெகு இலகுவாக தீர்த்து விடும்.

Sugar- free Jelly powder, soya sauce, Parsley, garlic, தேசிக்காய் தண்ணீர், உள்ளி, இஞ்சி என்பன Free Foods என்ற வகையறாக்குள் வருகின்றன. இவற்றை உங்களுக்குத் தேவையான அளவு தாரா-ளமாக சேர்த்துக் கொள்ளலாம்.

அடுத்த இதழிலும் தொடரும்

pundit prithipal

Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!
Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances
Call Today at 905-678-8932!

astrologer
Pundit Prithipal
26 Sledman St. Malton, ON L4T 1K5
Tel : 905-678-8932 Fax : 905-612-0906
cell : 416-219-7054
email : pundit@punditprithipal.com
website : www.punditprithipal.com




Free Consultation! Call for help today-"I understand your Problems"




# Niru BRAND®

**'நிரு' தயாரிப்புக்கள்'**

கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

# No.1

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

# தரம்

# No. 1

**Manufacturers & Distributors of**

*Niru Brand®* Products

**NIRU ENTERPRISES INC.**

76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada

**Tel: 416-750-1976 Fax: 416-750-8779**

E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe

UK. Marketing Office: NIRU ( Europe) LTD.

Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

# அருந்ததி எப்படி நட்சத்திரமானாள்?

'ஹலோ'
'வணக்கம் ஐயா'
'வணக்கம் அம்மா! எப்படி இருக்கிறியள்?'

'சுகமாக இருக்கிறோம். நீங்கள் மொன்றிய லுக்கு வந்திட்டுப் போயிருக்கிறியள். நாங்கள் சந்திக்கவில்லையே என்ற கவலை.'

'பரவாயில்லை அம்மா. நான்தான் வந்து சந்தித்திருக்க வேண்டும். நேரம் வாய்ப்பாக வரவில்லை. அடுத்த பயணத்தில் கண்டிப்பாகச் சந்திப்பேன். முருகையா மாஸ்டர் எப்படி இருக்கிறார்?'

'இருக்கிறார் சுகமாக கடைக்குப் போய்விட்டார். இப்ப வந்திடுவார். ஐயா....'
'சொல்லுங்கோ!'

## அறுவை - 30

'அருந்ததி நட்சத்திரமானது எப்படி?'
' சரியாய்ப்போச்சு! அருந்ததியே இப்படிக் கேட்கலாமா?'
'அப்படியெல்லாம் சொல்லக்கூடாதையா'

'சரி, சரி. முதலிற் கதையைச் சொல்லிவிட்டுத் தத்துவத்துக்கு வருகிறேன். அருந்ததி கருத்தம முனிவரின் குமாரி. சூரிய குல மன்னர் பலருக்குக் குருவாக இருந்த வசிட்டரை மணந்து சத்திமுனிவர் முதலாய நூற்றுவரைப் பெற்றவள். கற்புக்கரசி. இவளது அழகில் மயங்கிப் பல முனிவர்களும் தேவர்களும் இவளை அணுகிய பொழுதும் நிலைதளராது கற்பென்னும் திண்மையில் நின்றவள். ஆனால் தவவலிமை மிக்க வசிட்டர் அந்த அளவுக்கு ஒழுக்க சீலர் இல்லையென அவரது நடத்தையிற் சந்தேகங் கொண்டாள் மனைவி. சந்தேகித்த அருந்ததியை நட்சத்திர பதம்பெற முனிவர் சபித்தார். இப்படித்தான் அவள் நட்சத்திரமானாள் என்று சிவமகாபுராணம் கூறுகின்றது.

'இனி நான் கூறுவதைக் கேளுங்கள். புராணக் கதைகள், கற்பனைக் கதைகள், சமூக மேம்பாடு குறித்த கருத்துக்களை வலியுறுத்த எழுதப்பட்டவை. இந்தக் கதையில் கற்புச் சிறப்பிக்கப்படுகின்றது. கற்பு ஒழுக்கத்தில் வழுவாது நின்ற அருந்ததி நட்சத்திரமானாள். நட்சத்திரமானாள் என்றால் உலகத்தில் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டாள் என்று பொருள். அல்லது நட்சத்திரத்தைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருப்பாள் என்று விளக்கலாம். இன்னொருவகையாகச் சொன்னால் கற்பு நெறியில் ஒழுகிய அருந்ததி உலகத்தவரால் என்றென்றும் புகழப்படும் நிலையைப் பெற்றுக் கொண்டாள்.'

'கண்ணகியும் கற்புக்கரசிதானே ஐயா?'

'ஆம். அவளையும் தெய்வமாக்கித்தான் இளங்கோ அடிகள் காப்பியத்தை முடிக்கின்றார். இருப்பினும் இந்தத் தெய்வமகளிலும் நட்சத்திர அருந்ததி பிரகாசம் மிகுந்தவனாக விளங்குகின்றாள். திருமண வைபவங்களில் அருந்ததியைத்தானே மணப் பெண்ணுக்குக் காட்டுகிறார்கள். தமிழ்மகள் கண்ணகியின் பேச்சே கிடையாது. வாழ்த்துகின்றவர்கள் கூட கண்ணகி கோவலன் போல வாழுங்கள் என்று வாழ்த்துவதில்லை.'

'அதென்னென்று வாழ்த்துகிறது.' கோவலன் வேறொரு பெண்ணோடு வாழ்ந்தவன். இவள் புருஷனை இழந்தவள்...'
'அதைத்தான் நானும் சொல்லப்வந்தனான். கூடவே கண்ணகிக்குப் பிள்ளைகள் இல்லையென்ற குறையும் உண்டு. அதனாலே அருந்ததி கண்ணகியை முந்திக்கொண்டாள். மேனை, சாவித்திரி, அருசூயை, சுநீதி ஆகியோர் பட்டயலிற் சேர்க்கப்பட்டுப் பஞ்சகன்னியரில் ஒருத்தியாகி விட்டாள். அவர்களுள்ளும் கற்புக்கு உதாரணமாக அருந்ததியையே மணப் பெண்களுக்குக் காட்டும் வழக்கமும் வளர்ந்துவிட்டது. எனக்கென்னவோ தமிழ்ப் பெண்கள் வாசுகியைத்தான் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தத் தோன்றுகின்றது. மணப்பெண்கள் திருமண நாளில் வாசுகியைத்தான் பார்க்கவேண்டும்.'

'வாசுகியும் நட்சத்திரமே ஐயா?'

'அதுதானே சொன்னேன், நட்சத்திரமாதல் என்றால் நிலையான புகழ்நிலையை எய்துதல் என்று. அந்த வகையில் வாசுகியும் ஒரு நட்சத்திரந்தான். அருந்ததிக்கும் மேலாக மிக உயரத்தில் இருப்பதால் - உச்சத்தில் இருப்பதால் மணப்பெண்ணை அண்ணாந்து பார்க்கச் சொல்லி வாசுகியைக் காட்டலாம்..'
'உதார் ஐயா சொன்னது?'

'நான் தான்'

'நீங்கள் சொன்னால் ஆட்கள் கேட்பினமே?'

'ஆட்கள் கேட்கிறார்களோ இல்லையோ, இப்ப நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறியள் என்பது மட்டும் எனக்கு நல்லாய்த் தெரியுது. இந்தக் கருத்தை நாலைந்து பேர்களுக்குச் சொல்லி நீங்கள் பரப்புவீர்கள் என்பதும் தெரியுது. அப்ப வைக்கட்டே?'

'நன்றி ஐயா. மெத்த நன்றி. இந்தப் பக்கம் வந்தால் எங்களுக்கும் சொல்லுங்கோ?'

'சொல்லுவேன் அம்மா. மாஸ்ருடன் ஓர் அலுவல் கதைக்க வேண்டும். பின்னேரம் போல எடுக்கிறன்.

'பின்னேரம் படிப்பிக்கப் போய்விடுவார். இப்ப வந்த உடனே எடுக்கச் சொல்லுறன்'

'அதற்கென்ன வணக்கம் அம்மா'

'வணக்கம்'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**

• No Spraying • No Smelling • No Moving

**Neelam Silk**

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

**நீலம் சில்க்**

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்
**"நீலம் சில்க்"**

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)





**MANIKKANDAN**
Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

**புதிய கிளை**
1585 Ellesmere Rd.
(Progress Park Plaza)
**416.438.2225**



Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு

**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: **Siva: 416-283-1260**
790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7

# இறப்புக்கு வயதில்லை, இறப்பதற்கான வயதா?




உலகப்பு 'ஹப்பி தீபாவளி' என்று பிறிம்லி மீனாவின் மகன் கூறியபொழுது வானொலி ரெலிவிசன் பத்திரிகைகளில் மாறி மாறி மூழ்கியிருந்த உலகர் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார். ரூபன் தீபாவளிக்கு வாங்கிய சேட்டை போட்டு அதற்கு மேல் குளிருக்கு சுவற்றரும் போட்டபடி உலகர் இருந்த நிலை. தீபாவளி சிந்தனையில் மூழ்கிட வெடிச்சத்தங்கள் ஆடோ, கோழியோ சட்டியில் கொதிக்கும் வாசனை.




கந்தசஷ்டி விரதம் பிடிப்பவர்கள் வீதியில் சென்றாலும் மூக்கைத் துளைக்கும். தியேட்டகள் புதுப்படம். பெண்கள் ஒருபுறம் கோலாட்டம் ஆட, ஆண்கள் அற்கோல் ஆட்டம் ஆட, நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. அது உண்மையில் தீபாவளி தான். ஆனால் இங்கு வேலை நாட்கள் தீபாவளி, தைப்பொங்கல், கந்தசஷ்டி வந்தால் என்ன செய்ய முடியும். வழக்கமாக வரும் வாழ்த்துக்கள் கூட வருவது குறைவு. வானொலி, தொலைக்காட்சியில் ஒட்டுமொத்தமாக கலகலப்பான தீபாவளி வாழ்த்துக்கள் என்று மட்டும் கூறி சிலர் செல்வார்கள். அந்த வாழ்த்துக்கள் எமக்கும் என நினைத்து மகிழ வேண்டியது தான்.







நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ நாம்
நினைப்பதிலே நடப்பதுதான எத்தனையோ



வானொலிச் செய்திகளிடையே பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தின் மரணச் செய்தியும் அவரது வரலாறும் ஒலி/ஒளிபரப்புச் செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. மேற்குக் கரையில் இருந்து நோயாளியாக பரீசுக்குக் கொண்டுசெல்லப்பட்டு சடலமாக கெய்ரோவிற்குக் கொண்டு செல்லப்பட்டு உலகத் தலைவர்களே மரியாதை செலுத்தியபின் நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட செய்தியும் அவர் இறக்கமுதலே இஸ்ரேலில் அடக்கஞ் செய்ய விடமாட்டோம் என்ற எத்தனை செய்திகள் சிறிய இடமான பலஸ்தீனத்தின் விடுதலைக்குப் போராடியவர்க்கு உடல் அடக்கம் செய்வதற்குப் படும்பாடு. அரை உயிரிலேயே இறந்ததாகச் செய்தி விட்டார்கள். அவரின் போராட்டத்தை உலகம் எவ்வளவு மதித்தது. பயங்கரவாதம் என்று ஒருபகுதியினர் கூறினாலும் அது பண்பானது என்று கூறப் பலர் இருக்கிறார்கள். இதேவேளையில் ரூபனின் அறையில் இருந்து காற்றலையில் எழுச்சிப்பாடல் ஒலித்தது.

உலகே உனக்குக் கண்ணில்லையா... உலகமக்கள் தான் மக்களா?
தமிழீழ மக்கள் என்ன மாக்களா?




இத்தனை அமளி துமளிக்குள்ளும் செக்கண்புளோர் செல்லம்மா கந்தசஷ்டி கவசமும் கையுமாக வந்தா. ரொறொன்ரோவின் சகல பக்கங்களிலும் உள்ள கோயில்களில் கந்தசஷ்டி சூரன்போர், 17ஆம் திகதி எந்தக்கோயிலுக்கு போறதெண்டு தெரியேல்லை என பெருமூச்சு விட்டா. நவம்பர் 27, மாவீரர் நாள். இருளும் ஒளியும் மாறிவரும் உலகில் நவம்பர் 27, பகலின்றி இரவின்றி எங்கும் நினைவு தீபங்கள். உலகின் கண்ணை திறக்க வைத்த தியாகிகளுக்காக ஏற்றப்படும் தீபங்கள். அணைந்துவிடும் ஆனால் அவர்கள் நினைவு எம்மை விட்டகலாது. மாவீரர் தினம் நவம்பர் 27, ஆட்டிலறி அன்னம்மாவின் கண்ணிலிருந்து நீர்த்துளிகள் கசிந்ததை உலகர் காணத்தவறவில்லை. கவலையில் கண்ணீர் சிந்தத் தெரியாத கண்களுக்கும் எம்மை வாழ வைத்தவரை நினைக்காத இதயங்களும் உலகில் இருந்தால் இனி மனிதனைப் படைக்கும் கடவுள் அது இல்லாமலே அவர்களைப் படைக்கலாம்.



நவம்பர் மாவீரர் மாதமல்லவா? வானொலி, தொலைக்காட்சிகளில் மாவீரர் நினைவுப் படங்களும், மாவீரர் ஆனவர்களின் சரித்திரங்களும் ஒலி/ஒளி பரப்பாகிக் கொண்டிருக்கிறது.



எத்தனை உறவுகள், எத்தனை உயிர்கள், இன்றும் கண்முன் நிற்கிறார்கள். மறக்க முடியுமா?
இறப்புக்கு வயதில்லை. ஆனால் அது அவர்கள் இறப்பதற்கான வயதா?
எப்படி எப்படியோ மனிதருக்கு மரணம் வருகிறது. சிலரின் பெயர் கூட மனதில் நிற்பதில்லை.

இவர்கள் மரணத்தைத் தேடியவர்கள்,
மரணத்தை எண்ணிக் கலங்காதவர்கள்,
எம்மைக் கலங்க வைத்து தம்மை அழித்தவர்கள்,
கல்நெஞ்சத்தையும் கரையவைத்த மாவீரர்கள்

நகைச்சுவைத் தொடர் 118

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

மறப்பதா, நினைக்காமல் இருக்க முடியுமா?


## ஞானம்ஸ் ஸ்ரூடியோ



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough

## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் நந்தா





COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

**Nantha Aiyadurai**, B.Eng.
Sales Rep.
**Office :** 613.823.7555
**Cell :** 613.866.9931
**Toll Free :** 1 800 472.6512

## MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*





*LOW - LOW RATES AVAILABLE.*
*TO GET BEST RATE IN TOWN*
*PL. CALL: ANIL JOSHI*

For more information call:
Anil Joshi at
416.888.1072



# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (10 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

250 Summerlea Road, Brampton, ON

# NTE AUTO

## New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஒட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

| | |
|---|---|
| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | $2.99 |
| புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | $2.99 |
| வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | $4.50 |
| **Daily special** மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | $2.99 |
| **Dinner Special** சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | $2.99 |
| சனி - ஞாயிறு **Lunch Special** வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் | $5.99 |



| | |
|---|---|
| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | $2.99 |
| **Dinner Special** மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | $1.99 |
| **Daily Special** பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை | $2.99 |

### *Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00; 2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

$25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# இதயத்தைத் திற

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

இன்றுவரை உன் தற்பாதுகாப்புக்காக உனது இதயத்தை நீ இறுக மூடி வைத்திருந்திருக் கலாம். இன்று உனது இதயவாசலை அகலத் திறந்து விடு. மற்றவர்களைப் பற்றிய உனது மனக்குறைகள் யாவற்றையும் கைவிடு. யாரோ ஒருவராவது உனக்கு ஒரு நல்லதைச் சொல்ல, ஒரு நல்லதைச் செய்ய அவருக்கு இடம் கொடு. இன்று உனது இதயத்தைத் திறப்பது கஷ்டமாய் இருந்தால் நாளை முயற்சித்துப்பார்.

**எம்மத்தியிலும் எல்லாவிதப் பிரச்சனைகளும் இருக்கின்றன. இவை வருமுன் தடுப்பது, வந்த பின் சரிவரச் சமாளிப்பது போன்றவற்றிற்கு உதவிடவே நான் முயல்கின்றேன். இது சுலபமான வேலையல்ல. நம்பிக்கை பேணவேண்டியிருப்பதால் எனக்குத் தெரிந்த யாவற்றையும் முற்றாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடியாது.**

எனது இதயத்தைத் திறந்து, எனது அன்பை வெளிப்படுத்தவும் மற்றவரின் அன்பை அநுபவித்து மகிழவும் இன்று நான் தீர்மானிக்கின்றேன். அன்பிற்காகத்தான் செயற்படுகின்றேன் என்ற சாக்கில், நான் அன்பில்லாத செயல்களில் ஈடுபடுவது தவறு என்பதை உணர்ந்ததும் அன்பைப் புரிந்து கொள்வேன். ஒருவரை நீ நேசிக்கும் பொழுது துன்பந்தரும் பிரச்சினை களிலிருந்து அவரைப் பாதுகாக்க, அத்தியாவசியமானவற்றைப் பகிர்ந்து உதவவேண்டும் என்பது உனக்குத் தெரியும். மேற்கண்ட வாசகத்திற்கிணைய உனக்குப் பிரச்சினை வருமுன் தடுக்கும் முயற்சிதான் இது. ஆம்! ஒருபோதும் மற்றொருவ ரின் வாழ்க்கைத்துணையுடன் சோரம் போகாதே. இம் மாதிரியான நம்பிக்கைத்துரோகம் மிகவும் அபாயகரமானது. பொல்லாத விளைவுகளைத் தருவது. மாற்றான் மனைவியை மோகிப்பதை, அது அன்பு தான், இவள் தான் என் உயிர்க்காதலி என நீ உண்மையாக நம்பலாம். ஆனால் நீ இப்படி நினைப்பது தப்பு. மிகமிக தப்பு. உனக்கென்று பிறந்திருப்பவள் ஒருபோதும் மாற்றான் மனைவியாக இருக்கமாட்டாள். அவள் உனக்குச் சொல்பவற்றைக் கேட்காதே. நீ உனக்குச் சொல்பவை யாவற்றையும் மறந்து விடு. எந்தச் சந்தர்ப்பமாகிலும் சரி இன்னொருவரின் வாழ்க்கைத்துணையுடன் உறவு கொள்வது மிகவும் பாதகமான செயல். அது உனக்கு நன்கு தெரியும். ஆகவே தயவு செய்து மற்றவர் வாழ்க்கைத் துணையை விரும்பாதே.



எமது சமுதாயத்தில் தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லையே, என்ற உங்கள் சிலரின் குரல் எனக்குக் கேட்கின்றது. கடந்த 15 வருடங்களாக எம் மக்களுக்கு உளவளத்துணை புரியும் எனக்கு இப்படிப்பட்ட உறவுப்பிரச்சனைகள், எத்தனை எத்தனையோ இலைமறை காயாக எம்மத்தியில் ஒளிந்திருப்பது நன்கு தெரியும். எம்மத்தியிலும் எல்லாவிதப் பிரச்சனைகளும் இருக்கின்றன. இவை வருமுன் தடுப்பது, வந்த பின் சரிவரச் சமாளிப்பது போன்றவற்றிற்கு உதவிடவே நான் முயல்கின்றேன். இது சுலபமான வேலையல்ல. நம்பிக்கை பேணவேண்டியிருப்பதால் எனக்குத் தெரிந்த யாவற்றையும் முற்றாக உங்கள பகிர்ந்து கொள்ளவும் முடியாது.

வேறொருவரின் வாழ்க்கைத் துணையுடன் சோரம் போ பிழையானது என்பதை, உன்னை நேசிக்கின்றேன் எ சொல்லும் பலர், உனக்கு எடுத்துச் சொல்ல மாட்டார் ஏன்! உன் நண்பர்கள், உறவுகள் சிலரே, நீ செய்யக்கூ இச்செயலை நீ செய்ய உனக்கு உதவி கூடச் செய்வார் ஆனால் நான் உன்னை உண்மையாக நேசிக்கின்றே உனக்கு எது நல்லதோ, அதுதான் உனக்கு நடக்கவேண் என நான் விரும்புகின்றேன். மற்றொருவரின் தாரத்து சோரம் போவதை நீ செய்யக்கூடாது என்பது எனக்கு ந தெரியும். இவ்வாறு சோரம்போவது ஆன்மீகமான பாதுகாப்பானதோ அல்ல. யார் என்ன சொன்னாலும் நீங்கள் இணைய வேண்டுமானால் விவாகரத்தின் பகிரங்கமாக இணையுங்கள்.

ஓ! உன்னுடன் தகாத உறவு கொண்ட மா வேறு தகாத உறவுகளும் அவனுக்கோ அவளுக்கோ இருப்பது உனக் தெரியவந்து விட்டதா? இப்போ எ செய்வது? உடனடியாக உற உதறித்துறந்து வெளியேறு. இல்லை! ந இப்படியே தான் இருக்கப்போகிறே என்றிருந்தால் என்ன நடக்கும் தெரியு ஒருநாள் நீ சற்றும் எதிர்பார்க்காத போது செய்த பிழையை நீயே திரும்ப, நிச்ச துன்பத்துடன் அநுபவிப்பாய். தன்வி கட்டாயம் தன்னையே சுடும். இன்னொரு துணையுடன் சோரம் போகும் அன்பில்ல செயல், உனக்குக் கட்டாயம் கிடை வேண்டிய உண்மை அன்பினை உன் அநுபவிக்க விடாது.

இன்றுவரை நீ வேறொருவர் துணையு சோரம் போவது உண்மையான அன் நிமித்தம் தான் என்று பிழையாக நம்பியிருந்திருக்கல ஆனால் இன்று உனது சால்ஜாப்புகள், காரணங் யாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு இத்தகாத உற விட்டு வெளியேறு. இன்று என் முன்னேற்றத்தை தடுக் இத்தகாத உறவை துண்டித்து விடுகின்றேன்.

*மேலதிக தகவல்களிற்கு*
*அழையுங்கள் 905-624-9617*

லலிதா புரூடி



16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 157



**இட - வல**
1. ஒப்பந்தம்
3. மலை (வல-இட)
5. அச்சம்(வல-இட)
7. சிறப்பியல்பு
9. மிகுதி
10. உட்கருத்து
12. சுவாலை (வல-இட)
13. சுமை (வல-இட)

**மேல் - கீழ்**
1. சகோதரர்
2. வடதமிழீழத்தில் ஓர் ஊர்
3. தராசின் எடைக் கல் (கீழ்-மேல்)
4. வியப்புறு (கீழ் - மேல்)
5. மயிற்தோகை
6. இன்பம்
8. சந்திரன்
9. உள்ளங்கையால் எடு
11. சாதாரணம்
12. பாரத்தைத் தாங்கு (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா | ங் | கே | ச | ன் | து | றை | |
| ண் | | ளி | | | ர் | கா | பு |
| டீ | | க் | | | க் | | கை |
| ப | ல | கை | | | கை | கே | யி |
| ம் | | | றை | | | | லை |
| | அ | தி | ம | து | ர | ம் | |
| சு | | க் | | த் | | | பு |
| ப | ஞ் | ச | பூ | த | ங் | க | ள் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் November 26, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**155இல் வெற்றி பெற்றோர்**
1) S. Ragavan , Donmills
2) S. Rajaratnam, Etobicoke

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

**SHAWN TRUCK & FORKLIFT**
# DRIVING SCHOOL





**Fork Lift licence $75.00**

**Tricl licence $599.00**

**In Classes**
**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Trainin
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
**Pl. Call: Raja / Shan**

**416.525.7958/416.412.7618**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# உடல் எடை குறைய இலகுவான வழிகள்

கனடா போன்ற குளிர் வலயத்தின் நாடுகளில் வாழும் மக்களின் உடல் ஆரோக்கியத்திற்குச் சவாலாக அமைந்திருக்கும் காரணியாக உடல் எடை கூடுவது போன்ற பிரச்சினையே முதன்மையாக உள்ளது. இவ்வாறான உடல் எடை அதிகமாவதை குறைக்க பலரும் பல் வேறுபட்ட உடல் பயிற்சியைச் செய்வதுடன் மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறுகின்றனர். பலவிதமான மருந்து வகைகளையும் உட்கொள்கின்றனர். ஆனால் உடல் எடை மட்டும் திருப்தியளிக்கும் விதத்தில் குறைந்த பாடில்லையென்று கவலை கொண்டிருப்பவர்களையே காணமுடிகிறது.

## எடையைக் குறைக்க எளிய வழிகள்



பட்சிமொத்தாசனம்

உருளைக்கிழக்கை உணவில் அதிகம் சேர்ப்பதால் உடல் எடை அதிகமா வதுடன் பார்ப்பதற்கே அசிங்கமான தோற்றத்தையும் உருவாக்கும். மூட்டு வலி, முதுகுத்தண்டு வலி போன்ற வலிகளைத் தோற்றுவித்து விடும். இந்த உருளைக்கிழங்கு, இதற்குப் பதிலாக கருணைக்கிழங்கை உணவோடு சாப்பிடலாம். அது உடல் எடையைக் குறைக்கும் சக்தியை உடையது. இதனை சில வாரங்களாவது உணவில் சேர்த்து வரும்போது பலனை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

உடல் பருத்தவர்கள் தினமும் சூப் (soup) வகைகள் அருந்தி வருவது நல்லது. அடிக்டி சிற்றுண்டி வகைகள் உண்பதை அடியோடு நிறுத்தவேண்டும். கண்டபடி கோப்பி, தேநீர் குடிப்பது உடலுக்கு மேலும் எடையைக் கூட்டும். தேங்காய் அதிகம் சேர்த்த உணவு வகைகளையும், வெண்ணெய், முட்டை போன்ற கொழுப்புச் சத்துள்ள பதார்த்தங்களை உணவில் அதிகம் சேர்ப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

தண்ணீர் அதிகம் குடிக்கலாம். காய்கறிகள், பழங்களை அதிகம் சாப்பிடலாம். இனிப்பு வகைகளை அதிகம் உண்ணாமல் இருப்பது அவசியம். காலையில் எழுந்ததும் வெந்நீரில் சிறிது தேன் கலந்து குடிக்கலாம்.

## யோகாசனமும் உடல் பருமனும்

1. சர்வாங்க ஆசனம் (Shoulder stand) இந்த ஆசனம் எவராலும் இலகுவில் ஒரு சில நாட்கள் பயிற்சியில் செய்யக்கூடியது. இதனை காலையிலும் மாலையிலும் 5 நிமிடங்களுக்காவது தொடர்ந்து செய்து வரும்போது ஒரு சில



மாதங்களிலேயே நீங்கள் எடை குறைந்து எதிர்பார்த்த இலக்கினை அடையமுடியும்.

செய்முறை - தரையில் விரிப்பில் படுத்துக்கொள்ளவும். கால்கள் இரண்டினையும் தூக்கவும். பின் இடுப்பில் கைகளின் உதவியுடன் உடல் முழுவதையும் தூக்கவும். பின் இடுப்பைப் பிடித்திருக்கும் கைகள் முதுகைத் தாங்கிப் பிடித்திருக்கும்படி செய்யவும். இப்போது உடலின் பாரத்தை முழங்கைகள் தாங்கியிருக்கும். கழுத்திற்கும் கீழ்ப்பகுதி உடல் முழுவதும் மேல் நோக்கியிருக்கும். இத்துடன் கீழ்க்கண்ட ஆசனங்களையும் செய்து வந்தால் மிகவும் சிறப்பான பலனை அடையமுடியும்.

1. ஹலாசனம் (Plow)



ஹாலாசனம்

2. பட்சி மொத்தாசனம் (Forward bend)
3. தநூராசனம் (Bow)
4. திரிகோணாசனம் (Triangle)



இவற்றுக்கும் மேலாக மலச் சிக்கலை அடியோடு வராமல் பார்த்துக்கொள்ளவும்.

# பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்

பாரதி இலக்கிய சங்கமும், காவ்யா அறக்கட்டளையும் இணைந்து நடாத்திய சி. கனகசபாபதி நினைவு போட்டியில் கவிஞர் திருமாவளவனின் "அஃதே இரவு, அஃதே பகல்" என்ற கவிதைத் தொகுப்பும், தேவேந்திர பூபதியின் "பெயற்சொல்" என்ற நூலும் பரிசுக்குரியனவாக தேர்வு செய்யப்பட்டன.

ஈழத்துக் கவிஞர் ஒருவர் இவ்வாறு இந்திய தமிழ் இலக்கிய நிழலில் அடையாளம் காணப்படுவது வெகு அரிது. அந்தப் பெருமையை எமக்கு சேர்ப்பித்த திருமாவளவனுக்கு பாராட்டுக்கள்.

வாழ்வின்
இருத்தலையறியா மழலைகள்
இவர்கள்
மரணமே இலக் கென்று
காற்றிலே கரைவர்

என போரைப் பற்றி பாடுவதாகிலும்,

பிரிவின் துயரோடு
காதற் துணைவி கண்ணீர் கலந்து
கட்டிய சோற்றில்
கையை நுழைக்கிறேன்
மழைநீர் கலந்து நெக்குருகி
கிடக்கிறது சோறு
கூடவே மனசும்

என மழையை பற்றி பாடுவதாகிலும்

கோழிகளின் கூவல்
கோவில் மணிகளின்
தொழுகை அழைப்பு
இரண்டுமற்ற அம்மணக் காற்றில்
நுழைந்தது காலை

என புலம் பெயர் வாழ்வை பற்றி
குரல் எழுப்புவதாகிலும்

முன்னூறாண்டுகள்
உழுதோம்
எங்கள் நிலத்தை அவர்க்கு

இனியும்
உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே

என அறைந்து கூறுவதாகிலும், கவிஞரின் தனித்தன்மை ஒளிர்கிறது. சமூக பிரக்ஞை நிறையவே கொண்டுள்ள இவர் மென்மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்.


Rexdale Blvd & HWY 27




1, 1+Den
2, 2+Den &
3 Bedrooms
Starting From $159,900




Investment Or Move In
More New Luxury Condos Available In North York, Etobicoke ,Mississauga & Heart Of Downtown Toronto.



Make Your Life easier

Neilson/Mclevin



Condo Apt.

Excellent location
2 Bedrooms
2 washrooms
1 Kitchen
$154,900

Neilson/Mclevin



Condo Apt.

Detached/2 Story
2 Bedrooms
2 Washrooms
1Kitchen
$174,900

Warden/Finch



Condo Apt.

1 Bedroom
1 Washroom
$124,900



சீலன் (சிவா)
Cell: 416-451-0271
Web: www.veedu4u.com
Email:seelan@veedu4u.com

HOMELIFE HIGHER STANDARDS

Seelan (Siva)Aiyadurai
Sales Representative
HOMELIFE/GTA Realty Inc.
1711McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969 Fax:(416)321-6963

# விஷ்வ துளசி


வானரன்

கதை, திரைக்கதை, இயக்கம் - சுமதி ராம்
இசை - இளையராஜா,
எம். எஸ். விஸ்வநாதன்
ஒளிப்பதிவு - கண்ணன்
எடிட்டிங் - சுரேஷ் அர்ஸ்
கலை - பிரபாகர்

1940களில் பால்ய விவாகம் செய்விக்கப்பட்ட சிறுவர்கள், பின்னர் பிரிந்து விடுகின்றனர். அப்பொழுது அங்கு வாழும் மற்றொரு சிறுவனிடம் சிறுமிக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது. 20 வருடங்களின் பின்னர் இவ்விருவரும் சந்திக்கின்றனர். திருமணம் முடிக்க விரும்புகின்றனர். ஆனால் முன்னாள் பால்ய கணவன் அதைத் தடுத்து மணமகளை கொலை செய்து விடுகிறான். காதலன், பால்ய கணவனை கொலை செய்து விடுகிறான்.

## பாராட்டுக்கள்

1. இன்றைய மசாலா சூழலில் இவ்வாறு ஓரளவுக்கு நேர்த்தியாக படமெடுக்க முற்பட்டதற்கு.
2. திரைப்பட மொழி கவிதையாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மம்முட்டியும், நந்திதாதாசும் 20 வருடங்களின் பின்னர் சந்திக்கும் காட்சிகள்.
3. கலை இயக்குனர் பிரபாகர் 40களையும், 60களையும் கண் முன்னே கொண்டு வந்துள்ளார்.
4. அதேபோல் ஒளிப்பதிவும், எடிட்டிங்கும் (Editing) சிறப்பாகவுள்ளன.
5. நேர்த்தியான இயல்பான நடிப்பு: நந்திதா தாஸ், மம்முட்டி, சுகுமார், டெல்லி கணேஷ்.
6. அமெரிக்க கவிஞரான சுமதி ராமின் கவித்துமான மொழிக்கு.

## கவலைப்பட வைப்பவை

1. கோழிக்குஞ்சை குத்தி ரத்தத்தை சுவைக்கும் காட்சி - (Bush இன் ஞாபகத்தை தக்கவைப்பதற்காகவா) கொடுரமானது - தேவையற்றது.
2. கதையில் உள்ள ஓட்டைகள்:
அ. பால்ய விவாகம் புரிந்தவர்கள் ஏன் பிரிந்தனர்.
